890

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OF THE REGISTRAR OF



மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலன்
(ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸனம் செய்தருளல்)

JL

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	158
2. சொல்லும் அவிடும் சுருதியாம் [ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, பம்பாய்]	163
3. யசோதையின் உள்ளங்கண்ட விஷ்ணுசித்தன் [ஸ்ரீ. உ.வே. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்]	165
4. திருப்பாவையும், ஸ்ரீபாஷ்யகாரரும் [ஸ்ரீ. உ.வே, கோடியாலம், துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதராஸ்]	170
5. செய்தி	174
6. ஸ்ரீமச்சாரீரகஸுப்ரபாதம் [ஸ்ரீ. உ.வே. வித்வான், சின்னமு சி. ர. ஸ்ரீநிவாஸபாட்ராசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.]	177
7. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	181
8. ஸ்ரீமதழகியசிங்கரின் பத்ரி யாத்ரையும், ஹ்ருஷீகேசத்தில் ஸங்கல்பமஹோத்ஸவமும் [ஸம்பாதகர்]	183

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ௵ ஆடி ௴ { ஸஞ்சிகை 7

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தன் என்று நமது வேதங்களால் கூறப்படும் ஸ்ரீய:பதி நீங்கலாக மற்றெல்லாம் அளவில் அடங்கக்கூடியது தான். அளவென்பது கால(ம்) ஸம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம், இட(ம்) ஸம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். காலஸம்பந்தமான அளவென்பது இமைப்பொழுது துடங்கி யுகத்துடன் முடிகிறது. யுகத்துடன் நின்ற காலம், மற்றைய யுகங்களாக பிரிக்கப்படுகிறது. ஆகவே தொடர்ந்த அளவு இருக்க முடியாமல் யுகத்துடன் நிற்க வேண்டியதாயிற்று. இதேபோல்தான் மற்றெல்லா விஷயங்களுங் கூட.

இமைப்பொழுதில் ஆரம்பித்து யுகத்துடன் முடியும் கால அளவில் நேரக்கூடிய ஸம்பவங்கள் அநேகம். அவைகளுக்கென்று ஏற்பட்டுள்ள குணங்களும், தர்மங்களும் பலவிதமானவை. ஒருஸமயத்தில் இருப்பது மற்றொரு ஸமயத்தில் இருக்கமுடியாது. மாறுவதென்பது இவைகளின் இயற்கை. இம்மாதிரியான குணங்களுக்கும், தர்மங்களுக்கும் காலங்களுக்கேற்ப மாறுகின்றன.

இவைகளைப்பற்றி புராணங்கள் விஸ்தாரமாக விமர்சிக்கின்றன. கிருதயுகதர்மத்தின் அளவில் கால்பாகந்தான் கலியுகத்தில் காணப்படும் என்பது புராணங்களின் வாக்யம், கலியுகத்திலேயே ஒவ்வொரு நூற்றாண்டிலும் காணப்படும் தர்மங்களில் மாறுபாடுகளும் காணப்படுகின்றன. நமது நூற்றாண்டிலேயே, நமது வாழ்க்கையிலேயே ஆரம்பத்தில் காணப்பட்ட தர்மங்கள், தத்காலம் நிலைத்திருக்கவில்லை என்பது அநுபவத்தில் கண்ட, மறுக்க முடியாத உண்மை.

காலத்திற்கேற்ப தர்மங்களில் மாறுபாடுகள் காணப்படுவதுபோல், காலநிலையின் இயற்கை குணங்கள்கூட மாறுபடுகின்றன. இயற்கையின் தோற்றத்தில் மாறுதல் என்பது ஆச்சர்யமல்லவா.

உதாரணமாக ஒருவருஷத்தை ஆறு ருதுக்களாகப் பிரித்துள்ளார்கள் நமது முன்னோர்கள். அந்தந்த ருதுக்களுக்கும் இயற்கையாக ஏற்பட்ட குணமும், தோற்றமும் உண்டு. அவைகளை யநுஸரித்தே அவைகளுக்குப் பெயரிடப்பட்டன. ஆனாலும் இதுஸமயம் வஸந்த காலத்தில் கோடையின் உக்ரமும், கோடையில் மழை பொழிவதும், வர்ஷாகாலத்தில் மழையின்மையும் நமக்கு அநுபவ பூர்வமான ஸம்பவங்களாக ஆகிவிட்டன அல்லவா.

இம்மாதிரியான மாறுபாடுகளுடன் கூடிய தோற்றத்துக்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். காரணம் இன்றி கார்யம் நடைபெறுவதற்கில்லையே. ஊன்றி விமர்சித்தால் மனிதனுடைய ப்ரவ்ருத்திகளே மூலகாரணம் என்பது விளங்கும். ஸாக்ஷாத்தாக மனிதன் இதில் ஸம்பந்தப்பட்டதை நிரூபிக்கமுடியாது. ஆனால் பரம்பரையாக விளக்கிக் கூற இயலும்.

சில நாட்களாக உலகில் உள்ள வல்லரசுகளின் விஷவாயு ஸம்பந்தப்பட்ட அணுகுண்டு, ஜலவாயுகுண்டு இவைகளின் பரிசோதனையினால், இயற்கையில் உள்ள வாயு மண்டலம் விஷவித்துள்ளதாக்கப்பட்டு, ஜனங்களுக்குத் தீங்கை விளைவிக்கின்றன என்பது அநுபவ முறையில் விஜ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள். ஸமீபத்தில் நம் நாட்டில் பரவிவந்த விஷஜ்வரமும் இம்மாதிரி

ஏற்பட்டதென்றும், இதைக்காட்டிலும் இன்னும் கொடியதான மற்றொரு விஷஜுரம் பரவவும் ஹேதுக்கள் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதேபோல் இம்மாதிரி பரிசோதனைகளால், இயற்கை குணம் மாறுபட்டு, ருதுக்களின் போக்கே மாறுவதாகக் கேள்விப்படுகிறோம். காலப்போக்கில் இயற்கை மாறுபாடுகள் ஏற்படுவதையே அடிப்படையாகக் கொண்டு மனிதர்களில் குணபேதங்கள் வளர்கின்றன. சூழ்நிலை காரணமாக கிளிகளின் குணத்தில் மாறுபாடுகள் ஏற்பட்டதாக நாம் புராணத்தில் படிக்கவில்லையா. அதுபோல் மனிதனுடைய குணத்தில் இயற்கைத் தோற்றங்களினால் மாறுபாடுகள் தோன்றவே இவைகளை அடிப்படையாகக்கொண்டு, தர்மாதர்மங்களின் விவேசன ஜ்ஞானமும் மாறுபடுகிறது. தர்மம் வெறுக்கத்தக்கதாகவும், அதர்மம் விரும்பத்தக்கதாகவும் ஆவதற்குக் காரணமும் இதுவேதான்.

ஆகவே தத்காலம் நமது ஸமூஹத்தில் காணப்படும் அதர்மரூபமான சூழ்நிலையும், அதற்கேற்ப ஏற்படும் கார்யச்ரமங்களும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்பட்டவைகள் எனக் கூறலாம். அந்யோந்யாச்ரயங்கள் என்றுகூடக் கூறலாம். அதாவது:— சூழ்நிலையின் காரணமாய் அதர்மரூபமான கார்யங்களும், அதர்மரூபமான காரணங்களினால் சூழ்நிலை கெட்டதாக ஸம்பவிப்பதும் ஸம்பாவிதங்களே.

முற்காலத்தில் எது தர்மம் என்று கருதப்பட்டதோ அது ஸமூஹத்தில் வெறுக்கப்படுகிறதென்றால், உலகப்போக்கை நாம் என்னென்றுரைப்பது.

தன் கையே தனக்குதவி என்றபடி எறும்புகள் தங்கள் பிரயாசையினாலேயே, வரும் மழைகாலத்தை உத்தேசித்து ஆஹாரத்தை சேமித்துவைத்துக்கொள்வது இயற்கை. இதை நிதர்சனமாகக்கொண்ட மனிதர்களும் தங்கள் பிற்காலத்திற்கென்றும், தங்கள் ஸந்ததிகளுக்கென்றும், ஸமூஹத்திற்கென்றும் பாடுபட்டு சேமித்து வைத்தார்கள். கறையான் புற்றில் பாம்பு புகுந்துகொண்டு, அண்டிய வீட்டிற்கு இரண்டு நினைப்பதுபோல், இம்மாதிரியான ஸாதுஜனங்களைத் துன்புறுத்த நவீனகாலத்தவர் பாடுபடுவதை நாம் என்ன நினைப்பது.

முற்காலத்தில் ஸமூஹத்தின் நற்கதிக்காகவே தெய்வ வழிபாடுகளும், அவைகளை ஜனங்களுக்கு எடுத்துரைப்பதற்கும், அவர்களுக்கு வழிகாட்டுவதற்கென்றும், பெரிய பெரிய அறநிலையங்களும், அவைகளின் தலைவர்களும் தோன்றினார்கள். தங்களுடைய தபோபலத்தினால் பல பாமரமக்களை ஜ்ஞானிகளாக்கி, மற்றையோர்களை நல்வழிக்குக்கொண்டுவர அரும்பாடுபட்டனர். ஒவ்வொரு பெரியமடத்தின் சரித்திரத்திலும் இம்மாதிரி பாடுபட்டவர்களின் புகழ் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. தங்களுடைய சரீர ஸுகத்தையே கருதாது தமது ஸமூஹத்தினரின் வளர்ச்சிக்காகவே பாடுபட்டனர். அவர்களுடைய பிரயாஸையினாலும், அவர்களிடம் பொதுமக்களுக்குள்ள அன்பினாலும், மதிப்பினாலும், எக்காலத்திலும் உபயோகப்படக்கூடிய நிலையில் ஐச்வர்யங்களும் சேமிக்கப்பட்டன. இவைகள் பொதுவாக ஸமூஹத்தில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் உபயோகிக்கப்படுகிறதென்றாலும், விசேஷமாக அந்தந்த அறநிலையங்களில் ஸம்பந்தப்பட்ட ஜனங்களுக்கே, (ஸாதுக்களுக்கே) உபயோகிக்கப்படவேண்டியது நியாயமாகும். ஆனால் ஸமீபகாலத்தில் எல்லா ஸாதுக்களுக்கும் பயன்படுகிறதென்பதுதான் உண்மை.

உலகில் உள்ள எந்த நாட்டை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தாலும், அதன் சட்ட திட்டங்களுக்கும் இம்மாதிரி சேமிப்பும், செலவும் நியாயம் எனப்படுகிறது. ஒரு தர்மத்தை ஏற்படுத்தியவனின் அபிப்ராயத்தையநுஸரித்துத்தானே, அவனால் அதற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட ஐச்வர்யம் உபயோகப்படுத்தப்படவேண்டும். இதை மாற்ற யாருக்கு என்ன உரிமை இருக்கிறது. என்ன உரிமை இருக்க முடியும். மாற்றுவது நியாயந்தான் ஆகுமா.

இம்மாதிரியான புராதன தர்மங்கள் காப்பாற்றப்படாததும், காப்பாற்றுகிறவர்களைத் தடுப்பதும் காலவித்யாஸத்தினால் ஏற்படுகிற அதர்மமல்லவா. மலடி மருத்துவம் பார்ப்

பதுபோல், ஸம்பந்தப்படக்கூட யோக்யதை இல்லாதவர்கள் இவைகளில் தலையிட்டு திட்டங்கள் போடுவதென்றால் இதைக்காட்டிலும் அதர்மம் இருக்கமுடியுமா.

நம்முடைய வருவாய்க்கு வரி, செலவுக்கு வரி, ஆஹாரத்துக்கு வரி, குடியிருப்புக்கு வரி, உடுப்பதற்கு வரி என்றெல்லாம் வரி விதிக்கும் அரசாங்கமும் இவைகளை அநுமதிக்கின்றன என்றால் வேலியே பயிரை அழிப்பது போல் தானே காணப்படுகிறது.

தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு, அரசாங்கத்தின் உதவி கிடைக்க வழியில்லை. இதற்கு சட்டம் இடங்கொடுக்கவில்லை. ஆனால் இவைகளுக்கு அநீதி இழைக்க மாத்திரம் சட்டம் இடங்கொடுக்கிறதென்றால் இதைக்காட்டிலும் விந்தை இருக்கமுடியுமா.

தனிப்பட்ட மதஸ்தாபனங்கள், கடவுளின் பெயரால் ஏராளமான பூஸ்திதியை தஞ்சாவூர் ஜில்லாவில் அநுபவித்து வருகின்றனவாம். இதை மாற்றி அமைக்கவேண்டியது மிகவும் அவசியந்தானாம். இந்தக் கருத்தை ஒரு அங்கத்தினர் நூற்றுக்கணக்கான ஜனப்ரதிநிதிகள் உள்ள சட்டசபையில் வெளியிட்டிருக்கிறார் சில தினங்களுக்கு முன். இந்த ஸொத்துக்களை பொதுமக்களின் நலனுக்கு உபயோகிக்க வேணுமாம். பசுமாட்டைக் கொன்று செருப்பு தானம் செய்வதுபோலவேதான் காணப்படுகிறது இந்தக்கூற்று. மதஸ்தாபனங்களில் ஈடுபடுபவர்கள் மட்டில்தானா இம்மாதிரி வருவாயின் பலனை அடைகிறார்கள். இம்மாதிரியான ஸ்தாபனங்களுக்கு உட்பட்ட சிஷ்யர்களும், ஸ்தாபனங்களில் அபிமானமுள்ள இதரர்களும், மற்றைய ஸமூஹத்திலுள்ள ஆஸ்திகர்களும் சில ஸமயங்களில் மறைமுகமாக நாஸ்திகர்களும் கூட இவைகளின் (வருவாயின்) செலவு மூலம் பலனை அடைகிறார்கள் என்பது உண்மை. இவர்கள் எல்லோரும் பொதுஜனங்களைச் சேர்ந்தவர்களாக மாட்டார்களா. அல்லது இவர்களில் யாரேனும் ஒருவராவது பொதுஜனங்கள் என்ற ஸமூஹத்தில் சேராதவராக இருக்கமுடியுமா. அரசாங்கத்தின் பொறுப்பை வகிக்கும் சட்டசபையிலுங்கூட நாட்டின் நலனையே கருதுவதாகக் கூறிக்கொள்ளும் அங்கத்தினர்கள், பொதுஜன வருவாயில் ஊதியம் போன்ற தொகையை மாதாமாதம் பெற்றுவரும் கண்யபுருஷர்கள். இம்மாதிரியான அர்த்தமற்றவாதங்களைக் கிளப்புவதும், அதை மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதும், அங்கீகரிப்பதும், ஸமூஹத்தின் சீர்கேடான நிலையைத்தானே காட்டுகிறது.

இதன் கருத்துத்தான் என்ன? ஆலோசித்துப்பார்த்தால் நமக்குப் புலப்படும் காரணங்களுள் முக்யமானது இதுதான். அதாவது:— எந்த நபரும் தன் கருத்துக்கும் கொள்கைக்கும் விரோதமாகத் தோன்றக்கூடிய நிகழ்ச்சியையும், செயலையும், தனக்கு இஷ்டமில்லாதது எனக் கூறாமல், பொதுஜன விரோதமானது எனக் கூறுவது மிகவும் ஸாதாரணமான ஸம்பவமாகிவிட்டது. யார், எவ்வளவு, வெறுத்தாலுங்கூட, மறைக்கமுடியாத, மாறாத உண்மைகளையே உடையவை வேதங்கள் தானே. உலகில் உள்ள எல்லோரும், (சேதனாசேதனாத்மகமான ப்ரபஞ்சங்கள் எல்லாம்) ஸுகித்திருக்கவேண்டும் என்று வேதங்கள் உத்கோஷிக்கின்றன. இவ்வேதங்களை அடிப்படையாகக் கொண்டவைதானே நமது தர்மங்கள்.

உலகில் உள்ள எந்நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட தர்மத்திற்கென்று, ஒரு குறிப்பிட்டவரோ, ஒரு ஸமூஹமோ, ஏற்படுத்திக்கொண்டுள்ள வ்யவஸ்தைகளை மாற்றியமைத்துக்கொள்ள இவர்களுக்கேதான் அதிகாரம் உண்டே தவிர, இதரர்களுக்குக் கிடையாது. அரசாங்கத்துக்குக்கூட ஒருமுறைக்குக்கட்டுப்பட்ட அளவில்தான் அதிகாரம் உண்டு. உயர்ந்த பண்புகளுடன் கூடிய எந்த நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்தாலும், இவ்வுண்மை புலனாகும். அப்படியிருக்க நம் நாட்டிலுள்ள புராதனமானதும், ஸமூஹத்தில் உள்ள ஒவ்வொருவருடையவும், சரீராத்மதர்மங்களுக்கென்றே ஏற்பட்டதுமான, மதஸ்தாபனங்களின் உயர்ந்த கொள்கைளைத் தடைசெய்வதும், அவைகளின் வருவாயை, அதற்கு

விரோதமான செயல்களுக்குச்செலவிட முயற்சிப்பதும், இம்மாதிரி காரியங்களில் தூண்டிவிடும் ப்ரசாரங்களை ஸர்வஸாதாரணமாக அநுமதிப்பதும், உயர்ந்த பண்பாடுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடியவைகளா.

முன் கூறிய நிகழ்ச்சிகளில் ஸம்பந்தப்படுகிறவர்களிடையே நல்லவர்கள் இல்லாமலும் இல்லை. நாஸ்திகப்ரசாரங்களைத் தடுப்பதும், ஸாதுக்களையும், அவர்களின் கொள்கைகளையும் தூஷிப்பவர்களையும், ஸாதுக்களை பலவிதங்களிலும் ஹிம்ஸிக்கப் புறப்படுபவர்களையும், இம்மாதிரி செயல்களிலிருந்து தடுப்பதும் எவ்வளவு அவஸரமாகவும், முக்யமாகவும், அரசாங்கத்தாரால் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்பதை சட்டசபையில் நன்கு எடுத்துரைக்கும் பெரியவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள். இதுதான் உலக இயல்பு. நற்காரியங்களை அழிக்க, யார் எவ்வளவு பாடுபட்டாலுங் கூட அழிக்கமுடியாததுதான். நற்கார்யங்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம். அது தாத்காலிகமானதுதான். தர்மத்துக்கு இடையூறுகள் ஏற்படலாம். ஆனால் அழிவென்பது கிடையாது.

நமது ஸமூஹத்தில் மற்றும் சிலர் கீழ் வருமாறு கூறுவதையும் நாம் கேட்கிறோம். மதஸ்தாபனங்களின் வருவாயை கல்வி வளர்ச்சிக்கும், இதர அபிவ்ருத்தித் திட்டங்களுக்கும் உபயோகிக்கவேண்டுமாம். கல்வி வளர்ச்சி என்பது இவர்களுடைய அகராதியில் எதைக் குறிக்கிறதென்று இவர்களைத்தான் கேட்கவேண்டும்.

ஆரம்பக்கல்வி, உயர்தரக்கல்வி, தொழிற்கல்வி, மதக்கல்வி என்று பலவித பாகுபாடுகள் நமக்குத் தெரிந்தவைகள். இவைகளில் ஒன்றிலோ, பலவற்றிலோ ஈடுபடாத மதஸ்தாபனங்களை இக்காலத்தில் காணமுடியாது. மதக்கல்விக்காகப் பாடுபடுபவர்கள்தான் எல்லா மதஸ்தாபனங்களும், ஆத்மஜ்ஞானத்தை, தங்கள் கொள்கைகளுக்கு அநுகுணமாக ஒவ்வொரு மதஸ்தாபனமும் போதித்துவருகிறது. உயர்ந்த கருத்துக்களைக்கொண்ட சொற்பொழிவுகளை நிகழ்த்திவருகின்றன. ஏராளமான செலவில் உயர்ந்த மதநூல்களை, எல்லோருக்கும் கிடைக்கும் வகையில், அச்சிட்டு பிரசுரித்துவருகின்றன. இவைகளுக்கு உதவுவதற்கென்றே சில ஸ்தாபனங்கள், அச்சுயந்த்ரங்களையும் வாங்கி முத்ராலயங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட காலங்களில் மதநூல்கள் கற்றறிந்த பெரியோர்களை (பண்டிதர்களை) ஒன்றுகூட்டி, வித்வத்ஸதஸ்கள் நடத்தி, அவர்களையும் பஹுமானிக்கின்றன. இவைகளுடன் நில்லாமல் 'இளமையில் கல்' என்றபடி, சிறியவயதிலேயே மதப்பற்று வரவேண்டும் என்று நமது ஸ்தாபனம் ஆரம்பக் கல்விக்காக ஏராள செலவு செய்து பாடுபட்டு வருகிறது. பல இடங்களில் ஆரம்பப் பாடசாலைகளை ஏற்படுத்தி, தேர்ச்சி பெற்ற, அநுபவமுள்ள ஆசிரியர்களை நியமித்து, புராதன கலையும், பண்பாடும் காப்பாற்றப்படுவதோடு, ஆரம்பக்கல்வியும், மத உணர்ச்சியும் சிறுவர்களுக்கு போதிக்கப்படுகின்றன. இவைகள் எல்லாவற்றைக்காட்டிலும் வேறு உயர்ந்த முறையில் நன்மை செய்ய முடியுமா. இவ்வளவு அநும்பாடுபட்டும், நமது மதஸ்தாபனத்தின் முயற்சிகளை அறிந்துகொள்பவர்கள் நாம் எதிர்பார்க்கும் அளவில் இல்லை. ஏன்? காலப்போக்கின் காரணமாக தத்துவங்களை உணரமுடியாத காரணம்தான்.

ஸந்தர்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறவேண்டியிருக்கிறது. தர்மாநுஷ்டானத்துக்கு சரீரம் முதன்மையான ஸாதனமாகிறது. ஆகவே சரீரத்தை உசிதமான அளவில் போஷிக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதனுல் பொருளாதாரத் துறையில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. ஆனுல் இதையே முக்யமாகக் கருதுவது நமது ஸ்வரூபத்துக்கு உகந்ததில்லை. இம்மாதிரி நிலையில் நமது ஸமூஹத்தில் பெரும்பாலோர் கல்வியின்மூலம் வருவாய் தேடிக்கொள்ள வேண்டிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதனுல் நமக்குக்கிடைக்கக்கூடிய கல்வி பொதுவில் அங்கீகரிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டிய நிர்பந்தமும் பலருக்கு உண்டு. அரசாங்கத்தினால் அங்கீ

கரிக்கப்படுகிற பொதுக்கல்வியையே நாமும் நமது சிறுவர்களுக்கு போதித்தபோதிலும், அரசாங்கத்தில் அங்கீகாரம் ஓரளவு இதற்கு வேண்டியிருக்கிறது. இம்மாதிரி அங்கீகாரத்தை நாம் அபேக்ஷிக்குங்கால், அவசியமற்ற பல நியமங்களை நமக்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. கல்விச்சாலைகளில் பலவித பாகுபாடுகள் இருப்பினும், பொதுவான அம்சங்கள் எல்லாவிடங்களிலும் காணப்படுகின்றன. இதேபோல்தான் நமது கல்விஸ்தாபனங்களுங் கூட. மதஸ்தாபனங்களின் வருவாய் கல்விஸ்தாபனங்களுக்கு உபயோகிக்கப்படவேண்டும், என்று கூறும் பொதுஜன ப்ரதிநிதிகள் நமது நிலையைக்கண்டு என்ன பரிகாரங்கள் கூறுவார்கள். கல்வியின் தரத்தையும், போதிக்கப்படும் அம்சங்களையும் இவர்கள் நன்கு பரிசீலித்துப் பார்க்கட்டும். அதற்குப் பிறகு நியாயமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளட்டும். அப்படியில்லாமல் உண்மை நிலைமையையே தெரிந்துகொள்ளாமல், ஒவ்வொருவரும் தங்கள் மனம்போனபோக்கில், ஏதாவது பொதுநலனைக் கூறுவதுபோல், ஸமூஹத்தின் ஒரு பகுதியினரின் நலனுக்கு விசேஷமாக பாதகம் விளைவிப்பதும், அத்துடன் நிற்காமல் ஸமூஹத்துக்கே ஒரு அவக்கேடு விளைவிக்க நேரிடுவதும், மிகவும் வருந்தத்தக்கவைகள்.

ஒரு விஷயத்தை நாமும் தெரிந்துகொண்டுள்ளோம். பெருவாரியான பொதுஜனங்களுக்கு நமது ஸ்தாபனங்களின் நற்காரியங்கள் தெரிந்திருக்கவேண்டும் என்று நாம் எண்ணுகிறோம் அப்படியிருந்தபோதிலும் முக்யஸ்தர்களான சிலருக்காவது இவைகள் தெரியாமல் இருக்கக்கூடும். அதனால் பொதுநலனை உத்தேசித்து நமது ஸ்தாபனம் செய்துவரும் ஏராளமான செலவு விவரங்களை நாமும் ப்ரசாரம் செய்யவேண்டும் எனத்தோன்றுகிறது.

ஸதாகாலமும் நமது ஸம்ப்ரதாயத்தின் இணையற்ற தலைவராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கர் வேதாந்தகாலக்ஷேபாதிகள் ஸாதிப்பதின்மூலம் ஸமூஹத்தின் ஆத்மோத்தாரணம் செய்துகொண்டு எழுந்தருளியாயிருக்கிறபடி. உயர்ந்த மதக்ரந்தங்களை நமது ஸ்ரீஸந்நிதி “ஸ்ரீமாலோல முத்ராலயம்” ப்ரசுரித்து வருகிறது. வேத, ப்ரபந்த பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு அதற்கு வேண்டிய ஆஹாரஸௌகர்யாதிகளும், தகுந்த அத்யாபகர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ‘काणादं पाणिनीयं च सर्वशास्त्रोपकारकं’ என்றபடி வேதாந்த சாஸ்த்ரத்துக்கு அவசியமும், அங்கமும் ஆகிய ந்யாய, வ்யாகரண சாஸ்த்ராப்யாஸத்துக்கென்றே நமது சிறுவர்களுக்காக மதுராந்தகத்தில் ஒரு ஸம்ஸ்க்ருதகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு பதினாறு வர்ஷகாலமாக நடந்து வருவது பலருக்குத் தெரிந்ததே. இது மதராஸ் ஸர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இதுவுந்தவிர நான்கு வர்ஷங்களாக ஸ்ரீரங்கம், திருக்குடந்தை, மாம்பலம்போன்ற பலவிடங்களில் ஆரம்பப்பாடசாலைகளும், அதிலேயே பிள்ளைகளுக்கு ஸம்ஸ்க்ருத போதனையும், மதக்கல்வியும் கூடியதாகிய ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப்பட்டு செவ்வனே நடந்து வருகின்றன. இவ்வளவு தூரம் நமது வைதிக மதத்தையும், கலாசாரங்களையும் காப்பாற்றி வரும் மதஸ்தாபனங்கள், ஸமூஹத்துக்கு என்ன நலனை செய்கின்றன என்று கூறுபவர்களை நாம் என்னென்று கூறுவது.

இவைகளைக்காட்டிலும் ஜனஸமூஹத்துக்கு நலனை செய்யக்கூடிய கார்யங்கள்தானென்ன. வருவாய் முழுவதும் இம்மாதிரி கல்வி அபிவ்ருத்திக்காகவே உபயோகப்படுகிறது என்றால், மேலும் ஊக்கம் அளித்து இவைகளை வ்ருத்திசெய்யவேண்டியதுதானே எல்லோருடைய கடமையும் ஆகும்.

இம்மாதிரி ஸ்தாபனங்களினுடைய வருவாய்கூட காலக்ரௌர்யத்தால் குறைந்தே வருகிறது. அதற்கு உதவி புறியக்கூடிய மஹனீயர்கள்தான் ஸமூஹநலனுக்கு அவசியம் தேவையானர்கள். அப்படிக்கின்றி வீண் த்வேஷத்தை வ்ருத்திசெய்பவர்கள் ஸமூஹ ஸுஹ்ருத்துக்கள் ஆவார்களா.

நமது ஸுஹ்ருத்துக்கள் யோசித்துப்பார்த்து ஆவன செய்யவேண்டும்.

ஸ்ரீ:

சொல்லும் அவிடும் சுருதியாம்

वेदशास्त्ररथारूढाः ज्ञानखड्गधरा द्विजाः ।
क्रीडार्थमपि यत् ब्रूयुः स धर्मः परमो मतः ॥
अभियुक्ततरा ये ये सर्वशास्त्रार्थवेदिनः ।
ते ते यत्र प्रयुञ्जीरन् स सोऽर्थस्तत्वतो भवेत् ॥

என்கிற ப்ரகாரம் பம்பாய் வாஸிகளின் எதிர்பாராத ஒரு விசேஷ பாக்யத்தின் பயனுக ஸ்ரீ அழகியசிங்கர் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸமயம் காலக்ஷேபங்களிலும் ஸரி, மற்றபடி தனித்திருக்கும் ஸமயங்களிலும் ஸரி அநேகம் விஷயங்கள் கேட்கும் அதிகாரிகளுக்குத் தக்கபடி ஸாதிப்பதுண்டு, அவைகளைக் கேட்கும்போதெல்லாம் ஸ்ரீபட்டரின் முக்த ச்லோகம் ஞாபகத்தில் வரும். அவைகளில் ஏதோ சிலவற்றை '**एकस्स्वादु न भुञ्जीत**' என்கிறவளவில் இந்த அம்ருதபானத்தை '**भौमाः पिबन्त्वन्वहं**' என்றபடி எல்லோரும் அநுபவிக்கட்டுமென்கிற அபிலாஷையினுல் எழுதலானேன்.

ஒரு ஸமயம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குத் தன்னை ஒரு ஸாரதியாக நினைத்திருப்பதாக ச்ருதிப்ரமாணங்களுடன் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்தது ரொம்பவும் அழகாகவிருந்தது.

'आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव च ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥'

என்கிற கடவல்லியின் ப்ரகாரம் தாம் பெருமாளுக்கு ஒரு ஸாரதியாக பாவிப்பதாயும், அதில் எப்படி யஜமானன் ஸாரதியை ஆஜ்ஞாபிக்கும் காலத்தில் அவன் கைங்கர்யத்துக்குக் காத்திருப்பனே, அப்படியே தானும் பெரிய பெருமாள் ஆஜ்ஞாபிக்கும் காலத்தில் அவன் திருவடிவாரம் வந்து நிற்பதாயும், அவன் எங்கெங்கே போக நியமிக்கிருனே, அங்கெல்லாம் தாம் ஸித்தமாகக்கிளம்பிவிடுவதாயும்; அவன் ஸவாரியை விட்டு விட்டுப் போகும் ஸமயம் ஸாரதியைப் பார்த்து சாப்பிட்டுவிட்டு வா என்று சொன்னவளவிலே ஸாரதி தனக்கேற்பட்ட அநுஷ்டாநாதிகளை முடித்துக்கொண்டு அவன் நியமித்த காலத்தில் வந்து காத்திருக்குமாப்போலே, தாமும் இஜ்யை முடிந்த பிறகு பெரியபெருமாள் நியமனத்தின்பேரில் மதூகராதிகளை முடித்துக்கொள்ள எழுந்தருளுவதாயும் ஸாதித்தபடி. அதே யஜமானன் அதிகதூரம் செல்வதாயிருந்தால் தன்னுடைய யானத்தையும் தூமசகடாதிகளில் தூக்கிப் போட்டுக்கொண்டு ஸாரதியையும் அதோடே கூடவே வரும்படி நியமிக்குமாப்போலே பெரியபெருமாளும் கொஞ்சம் ஜாஸ்திதூரம் போகும் ஸமயம் ஸ்ரீ அழகியசிங்கரும் பல்லக்கில செல்வதும் அவன் நியமனத்தின்பேரில் தான் ரதத்வேந ரூபிதமான திருமேனியைப் பல்லக்கில் போகச்செய்வது என்று ஸாதித்தாயிற்று.

யஜமானன் விச்ரமிக்கப்போகும் ஸமயம் ஸாரதியை வண்டியிலேயே தூங்கும்படி நியமிக்குமாப்போலே பெருமாள் நியமனத்தின் பேரில் யோகத்தையும் திருவுள்ளம்பற்றுவதாக ஸாதித்தாயிற்று. அநேகமாக இது விஷயம் ஸாதித்தபோது ஆநுமாநிகாதிகரணத்தில் அநேகம் விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அநேகமாக காலக்ஷேபகாலங்களில் சாஸ்த்ரஜ்ஞர்களும் இதரர்களும் சேர்ந்திருக்கும் ஸமயங்களில் யாராவது ஏதேனும் ஸம்சயம் கேட்டால் அந்தந்த அதிகாரிக்குத் தக்கபடி பதில் ஸாதிப்பது மிகவும் ரஸமாக இருக்கும்.

ஒருஸமயம் '**न वायुक्रिये पृथगुपदेशात्**' என்கிற ப்ரகரணம் நடக்கும் ஸமயம் அடியேன் வழக்கப்படி அன்றையதினம் ஸ்ரீபாஷ்யத்தை ஸேவித்துக்கொள்ளாமல் சென்றேன். அங்கு பாஷ்யபங்க்தி பூர்வபக்ஷம் என்ன என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளாமல் முக்ய ப்ராணன் வாயுமாத்ரமா, வாயுக்ரியையா, அல்லது வாயுரேவ கஞ்சந விசேஷமாபந்நமா என்று விகல்பித்து ஸ்ரீபாஷ்யகாரர் எடுத்திருக்கும் பங்க்தியை எடுத்துக்கொண்டு '**एतस्माज्जायते प्राणः मनस्सर्वेन्द्रियाणि च । खं वायुः**' என்று வாயுவைத் தனியாகச் சொல்லிவிட்டபடியால் வாயு முக்யப்ராணனன்று.

உச்வாஸ நிச்வாஸங்கள் முக்யப்ராணனுக இருக்கலாமோ என்று பூர்வபக்ஷி எடுத்ததில் எனக்கு ஏற்பட்ட ஸம்சயம் '**वायुक्रियापृथङ्निर्दे**

शानहे. கடம் நஷ்டமானல் அவஸ்தாந்தரா பத்தியில் ம்ருத்தாகிவிடுகிறது. ம்ருத்து கடமானல் அநுவர்த்தி இருந்துகொண்டிருக்கிறது. அதேமாதிரி வாயுக்ரியையில் காரண த்ரவ்யத்திற்கு ஏற்பட்ட அநுவர்த்தியாவது கார்யத்துக்கேற்பட்ட அவஸ்தாந்தராபத்தியாவது இல்லையே. இது பூர்வபக்ஷீ, ஸித்தாந்தி உபயத்ராலும் ஒப்புக்கொண்ட விஷயம்தானே. அப்படிக்கிருக்க பூர்வபக்ஷத்தில் வாயுக்ரியை முக்யப்ராணனக (த்ரவ்யமாக) இருக்குமா என்கிற விசாரம் ஏற்பட்டது என்று கேட்டேன். காலக்ஷேப கோஷ்டியில் யாரோ அதற்குப் பதில் சொல்ல ஆரம்பித்த ஸமயம், ஸ்ரீஅழகியசிங்கர் குறுக்கிட்டு அந்தந்த அதிகாரிக்குத் தக்கபடி பதில் சொல்ல வேணும். 'अप्रान् पृष्टः कोविदारानाचष्टे' इतिवत् சொல்லக்கூடாது. ஒரு வைத்யன் ஒருவனின் உபாதியைத் தெரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி சஸ்த்ரசிகித்ஸை செய்வதுபோலவே கேட்கும் ஸந்தேஹத்திற்குத் தக்கபடி சிகித்ஸை செய்யவேணும். ப்ரக்ருதம் இவர் கேட்டதற்கு நீர் சொல்லுகிற பதிலுக்குமேல் அவர் கேள்வி தயாராக இருக்குமென்று ஸாதித்து அடியேனைப் பார்த்து. நாளை ஸ்ரீபாஷ்யபங்க்தியை மறுபடி ஸாவதானமாக ஸேவித்து வாரும். பிறகு நான் ஸந்தேஹத்துக்கு ஸமாதானம் சொல்லுகிறேன் என்று ஸாதித்தாயிற்று.

க்ருஹத்துக்குச்சென்றதும் ஸ்ரீபாஷ்யத்தை எடுத்து ஸேவித்தேன். அதில் அடியில் கண்டபடி பூர்வக்ஷம் இருந்தது.

'कोयं श्रेष्ठः प्राणः किं महाभूतद्वितीयवायुमात्रम्। तस्य वा स्पन्दरूपक्रिया। अथ वायुरेव कंचन विशेषमापन्न इति विशये वायुरेवेति प्राप्तम् । यः प्राणः स वायुरिति व्यपदेशात्। यद्वा वायुमात्रे प्राणत्वप्रसिद्ध्यभावात् उच्छवासनिश्वासादिवायुक्रियायां प्राणशब्दप्रसिद्धेश्च तत्क्रियैव। इति पूर्वपक्षः॥

இதில் பூர்வபக்ஷி வாயுக்ரியையில் ப்ராண சப்தப்ரஸித்தியிருப்பதால் அதுவே ப்ராணனுக இருக்கட்டுமே என்று கேட்ட கேள்வியேயொழிய நான் ஸம்சயப்பட்டபடி வாயுக்ரியையை த்ரவ்யமாக நினைத்துக் கேட்டதில்லை.

இதற்கு ஸித்தாந்தம்:-

'उच्छवासनिश्वासादावपि प्राणस्स्पन्दत इति क्रियावति द्रव्य एव प्राणशब्दप्रसिद्धिः । न क्रियामात्रे इति॥

மறுநாள் அநந்தப்ராணமங்களுடன் ஸம்சயத்துக்கு ஸமாதானம் क्रियावति द्रव्य एव प्राणशब्दप्रसिद्धिः' என்று பாஷ்யத்திலிருப்பதால் அடியேனுக்கு ஸம்சயநிவ்ருத்தியாகிவிட்டது என்றேன். முதல்நாள் ஸாதித்தபடி அடியேனுக்குத் தக்கபடி சிகித்ஸை செய்தது எல்லோருக்கும் த்ருப்திகரமாக இருந்தது. அடியேனுடைய பாக்யவசத்தால் அநேகம் ஜ்ஞாதாக்களிடம் அநேகவிஷயங்கள் கேட்கும்படி நேர்ந்ததில் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விஷயம் ரொம்ப ரஸமாக அநுபவிக்கத்தக்கதாய் இருக்கும். அடியேன் பரமாசார்யர் மதத்ரயநிருபகர் வித்வந்மண்டலமண்டனம் காளி வித்வான் ரங்காசாரியர்ஸ்வாமி திருவடிவாரத்தில் காலக்ஷேபகாலங்களில் அநேக லௌகிக வைதிக விஷயங்கள் க்ரஹிக்கநேர்ந்தது. 41-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கரிடம் பல ஸமயங்களில் கேட்ட விஷயம் இப்பவும் ஞாபகத்தில் இருக்கிறது. ஆனல் அடியேன் ப்ரக்ருதம் ஸ்ரீஅழகியசிங்கரிடம் அவ்வயெல்லாவற்றையும் ஒருங்கே அநுபவித்த பாக்யத்தை என்னென்று சொல்வது.

ஸ்ரீ:

யசோதையின் உள்ளங் கண்ட விஷ்ணுசித்தன்

ஸௌலப்ய ஸௌசீல்யாதிகளின் எல்லையில் நிற்கும் பரமாத்மாவாகிய கண்ணபிரானைக் கன்றுகள் மேய்க்க அனுப்பிய யசோதை தன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறாள். அவள் உடல் மட்டுந்தான் அங்கே உட்கார்ந்திருக்கிறது. நினைவு கண்ணன் சென்றவிடத்திற்கே சென்று வட்டமிடுகின்றன. அவ்வளவு வருந்துகிறவள் அவனை முதலிலேயே அனுப்பியிருக்கலாமோ? கூடாதுதான். ஆனால் அவள் அவனை மனப்பூர்வமாகவா அனுப்பினாள்? அதுதானே இல்லை. கண்ணனை அரை க்ஷணமும் பிரிந்திருக்க விரும்பாதவள்தான் அவள். தன் கண்ணினும் அருமையாகப் பாவிப்பவள் அவள். அப்படியானால் ஏனோ அனுப்பியிருக்கவேண்டும்? தினம் தினம் அந்த ஆயர்பாடியிலுள்ள மங்கையர் அவளிடம் வந்து கண்ணன் மேல் சொல்லும் குற்றங்கள் எத்தனையெத்தனை? அப்பப்ப! காது கொண்டு கேட்க முடியுமா? அவர்கள் சொல்லுவதை யப்படி யப்படியே கேட்டு நம்பிவிடுபவளும் இல்லை யசோதை. தன் குழந்தை கண்ணனுக்குப் பரிந்து அவர்களையெதிர்த்துக் குறை கூறியும் அனுப்புவாள். அதுவும் தன் கண்ணனிடம் கொண்ட அளவற்ற ப்ரீதியினாலல்லது அஹங்காரத்தினாலல்ல. அப்படி யவள் அனுப்பினால்கூட அந்த மங்கையர் மறுபடியவளிடம் வந்து கண்ணன்மேல் குறை கூறாமல் இருந்ததில்லை.

சிலர் வருவார்கள்; மாமீ! எங்கள் கூந்தலைப் பிடித்திழுத்தான் கண்ணன் என்பார்கள். அப்போதே மற்றும் சிலர் வந்து மாமீ! உங்கள் பிள்ளை எங்கள் பின்னல்களைப் பிடித்திழுத்துக் கூந்தலை அலங்கோலம் செய்து வம்பு செய்து விளையாடினான் என்பார்கள். 'மாமீ! எங்களை உங்கள் பிள்ளை பல பல தொந்தரவுகள் செய்தான் என்பார் சிலர். 'யசோதா மாமீ! உங்கள் பிள்ளை என்னென்ன தொந்தரவுகள் செய்தான் தெரியுமா? அடேயப்பா! 'அடே க்ருஷ்ணா! உன் அம்மாவிடம் சொல்கிறோம்' என்று பயமுறுத்தப் பார்த்தோம். அதற்கவன் என்ன சொன்னான்என்கிறீர்கள். 'சொல்லுங்களடீ சொல்லுங்களேன்' என்று மிக அலக்ஷ்யமாகக் கூறிவிட்டுப் போகிறான்' என்பார்கள் சிலர். இவைகளைப் போல் இன்னும் எத்தனையோ குறைகள். அடேயப்பா! இத்தனை துஷ்டத்தனங்களையும் நம் குழந்தையா செய்தான்? கிருஷ்ணனும் இப்படிச் செய்யக்கூடியவனா? என்று சிந்திப்பாள் ஒரு நிமிஷம் யசோதை. மறுநிமிஷம் அந்த மங்கையரையும் அவர்கள் அழகையும் பார்த்துப் பெண்ணாகிய யசோதையே உருகிப் போவாள். பெண்களைத் துன்புறுத்துவது தகாது. இருக்கட்டும், கிருஷ்ணனைப் பார்த்துக் கேட்கத்தான் வேண்டும். அவன் இவை செய்தான் என்பது உண்மையானால் அவனைச் சும்மா விடக்கூடாது, என்று தீர்மானித்துக்கொண்டு 'எங்கே அந்த கிருஷ்ணன்? சொல்லுங்கள் இப்போதே, அவனை என்ன செய்கிறேன் பாருங்கள்' என்று சொல்லிக்கொண்டே கிளம்புவாள் யசோதை.

கண்ணனிருக்குமிடம் காட்டுவதற்கு அந்த மங்கையரும் கூடவே செல்வார்கள். யசோதை கண்ணனைப் பிடித்து மிரட்டும்போது தாங்கள் சுற்றி நின்று அவன் செய்த கொடுமைகளைச் சொல்லித் திட்டவேண்டுமென்ற ஆவலாகவே கூடச் செல்கிறார்கள். 'இங்கே வந்தானா என் பிள்ளை?' 'க்ருஷ்ணன் வந்தானோ?' கண்ணனைக் கண்டீர்களா?' எங்கே என் கண்ணனைக் காணோம்?' என்று அங்கங்கே விசாரித்துக் கொண்டே செல்வாள் யசோதை. அவள் கேட்குமிடங்களிலெல்லாம் 'இப்போதுதானே இங்கிருந்தான், எங்கு சென்றானோ.' சற்று முன் இங்கேதான் இருந்தான், இப்போது எங்கு சென்றிருப்பான்' என்று கூறுவோர்களும், வந்தாயா யசோதா! உன் பிள்ளை இங்கு சற்று முன் வந்தான். இன்னின்ன தொந்தரவுகள் செய்தான், உன்னிடம் சொல்லவேண்டுமென்று தோன்றியது, பிறகு போனால் போகிறது குழந்தை என்று தோன்றியது, பேசா

மல் இருந்துவிட்டோம். நீயே வந்தபடியினால் சொன்னோம். இல்லாவிட்டால் சொல்லமாட்டோம்’ என்று சொல்வாரும்; கேளம்மா யசோதை! உன் பிள்ளை தினம் தினம் இங்கே வந்து செய்யும் கொடுமை தாங்கவில்லை, உன்னிடம் வருவதற்குத்தான் கிளம்பினோம், அதற்குள் நீயே வந்துவிட்டாய்’ என்று என்று சொல்வோரும், ‘யசோதா! கண்ணன் வந்தான் இப்போது, தினமும் இப்படித்தான் வருவான்; வெண்ணெய், நெய், பால், ஏதாவது கேட்பான், வாங்கிச் சாப்பிட்டுவிட்டுத்தான் போவான்; நீ இங்கு வருவது தெரிந்து போய் விட்டான் போலிருக்கிறது. குழந்தையை வரச்சொல், கோபித்துக்கொள்ளாதே அவனை’ என்று கூறுவோருமாகவே இருக்கின்றனர். கோகுலம் முழுவதும் சுற்றிவிட்டாள் யசோதை. கண்ணனைக் கண்டபாடில்லை. யசோதை பார்க்காத இடமும் இல்லை. கண்ணன் திருவடி படாத இடமும் இல்லை. தன்னால் தன் பிள்ளையைப் பார்க்கமுடியவில்லை என்ற உணர்ச்சி யசோதைக்கு மிகவும் கோபத்தை உண்டுபண்ணிற்று. கண்டவுடன் எப்படி அவனை தண்டிக்கலாம்? என்பதே அவளுடைய முக்கிய யோசனை. எந்த தண்டனையும் அவனுக்குத் தரலாம் என்றே எண்ணுவாள். அப்போது இனி தேடுவதில் பயனில்லை, அவனைத் தேடிப் பிடிக்க முடியாதென்று தோன்றும்போது திடீரென்று கண்ணன் தோன்றுவான்.

ஏககாலத்தில் எல்லோருடைய கண்களும் அவனை நோக்கும். அவனைப்பற்றியும் அவன் வரவைப்பற்றியதுமான செய்திகள் ஒரேயிரைச்சலாகக் கிளம்பி அடங்கிவிடும். எல்லோருடைய கண்களும் சிந்தையும் கண்ணன் வசமாகவே போய்விடும். யசோதைக்கும் அப்படித்தான் இருக்கும். ஆனால் அவள் அவனுக்குத் தாயாகையாலும் அவன் மேல் ஊரிலுள்ளோரெல்லாம் கூறும் வசையைப் பொறுக்கமாட்டாதவளாகையாலும் யசோதை மற்றவர்களைப் போல் வசமிழந்து நிற்கவில்லை. கண்ணனைக் கண்டதும் தானே ஓடிமறைந்த கோபத்தை எங்கிருந்தோ வரவழைத்துக்கொண்டு அவனை அதட்டுவாள். அவன் என்னென்ன குற்றம் செய்ததாக அக்கன்னியர்கள் சொன்னார்களோ அவைகளைக் கூறி அவனைத் திட்டுவாள். அப்போது அவன் ஒரு வீட்டில் வெண்ணெய் கேட்டதையும் கூறியே அதட்டுவாள். ராஜா பிள்ளை யாசிக்கலாமா?

அப்போது கண்ணன் முகம் மாறுபாடடையும். அந்த முகபாவம் காட்டும் இந்திரஜாலங்களை என்னென்பது? அவளுடைய திட்டுகளுக்கவனும் பதில் பேசுவான். அந்தப்பெண்களைப்பார்த்து ஓஹோ! இந்தப் பெண்களா? அம்மம்ம இவர்கள் ஸாமாந்யமானவர்களா! அதோ அந்த அம்மா என்னைக்கூப்பிட்டு தன் தலையலங்காரம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னாள். அவளுக்குப் பக்கத்திலிருப்பவள் தன் தலையை வாரிவிட வேறு ஒருவரும் இல்லாதபடியால் என்னையே வாரிவிடச் சொன்னாள். இதோ இந்த மங்கை என் தலைக்கு அலங்காரம் செய்கிறேன் என்று கூறி என்னையழைத்து ஏதோ எனக்கும் அலங்காரம் செய்து தனக்கு என்னையலங்காரம் செய்யச் சொன்னாள்’ என்று இம்மாதிரி அவன் ஓர் பட்டியல் படிக்க ஆரம்பிப்பான். இதைக் கேட்கவும் யசோதைக்கு என்னவோ செய்யும். ஓர் அவமான உணர்ச்சியும் தன் பிள்ளையிடம் இரக்க உணர்ச்சியும் உண்டாகும். ‘அடே க்ருஷ்ணா! உனக்கு வெட்கமில்லை? நீ ஆண் பிள்ளைதானா? மானமில்லை? இப்படி வீடு வீடாய் அலைவதுமல்லாமல் பெண்கள் இருக்குமிடங்களிலேயே சுற்றுகிறாயே. அதுதான் போகிறது என்றால் அவர்கள் கைப்பாவையாகவே இருக்கிறாயே. குடும்பகௌரவம், மானமான உணர்ச்சி. எதையும் பார்க்காமல் இப்படி என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாயே’ என்று ஏதேதோ சொல்லிக் கூவிக்கொண்டே ஆத்திரத்தோடு கண்ணனை நெருங்குவாள். அவ்வளவுதான், இதுவரையில் பேசாதிருந்த பெண்கள் இப்போது பேச ஆரம்பிப்பார்கள். பேச்சென்றால் வெறும் பேச்சல்ல. பொலபொலவென்று கண்ணீர் உருக்கும் பேச்சு. கண்ணீர் கலந்த இன்பவேதனைப் பரவசப் பேச்சு.

'மாமீ! பாவம் கண்ணனை ஒன்றும் கோபிக்காதீர்கள்' என்றும், 'யசோதா மாமீ! என் கண்ணனை ஒன்றும் செய்யாதீர்கள்' என்றும், திட்டாதீர்கள் மாமீ, அடிக்காதீர்கள் மாமீ என் கண் ... ... என்றும் தொண்டையடைக்கப் பாதி வெளிவந்தும் வாராதும் அவர்கள் ஏககாலத்தில் கூவுவார்கள்: இப்போது யசோதையின் கோபம் அப்பெண்கள் மேல் திரும்பும். ஏராளமான குற்றம் சொல்லித் தன்னை இவ்வளவு தூரம் அலையவைத்ததுமல்லாமல் இப்போது மத்யஸ்தம் வேறு செய்யவந்தால் அவளுக்குக் கோபம் வாராதா? இந்த எண்ணத்துடன் அவர்களைப் பார்த்த யசோதை அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிடுவாள். ஏனெனில், அபரிமிதமான அழகும் பெண்மைக்குரிய குணவிசேஷங்களும், கண்ணனிடமுள்ள எல்லையற்ற ப்ரீதியும் அவர்களிடம் வெள்ளமிட்டோடுவதைக்காண்பாள்யசோதை. 'ஆஹா! என்னே அழகு! என்னே ப்ரீதி! பெண்ணான என்னையே மயக்குகிறதே இவர்கள் அழகும், குணங்களும்; கண்ணனை அவைகள் என்ன பாடு படுத்தாது?' என்று தடுமாறும்போது கண்ணன் யசோதையின் அருகாமையில் வருவான். 'அம்மா! என் அம்மா இவ்வளவு தூரம் ஓடிவந்தாய்? ஐயோ பாவம்! மேல் மூச்சு வாங்குகிறதே. என்னைத் தேடிக் கொண்டா வந்தாய் இவ்வளவு தூரம்? யாரிடமாவது சொல்லியனுப்பினால் ஓடிவரமாட்டேனா? இதோ பார் அம்மா என்னை! என் மேல் கோபமா? என் செல்வ அம்மா இல்லே? என்னை வேண்டுமானால் அடித்துவிடு. ஆனால் உன் கையால் மட்டும் அடிக்காதே. உன் பட்டுப்போன்ற கைகள் நோகும். தயிர் கடை கயிற்றால் அடி. இல்லாவிட்டால் மத்தால் அடி' என்றிப்படிக் கொஞ்சிக் கொஞ்சிப்பேசுவான். கண்களில் ஆனந்தவெள்ளம் பெருகும் அந்த மாயக் கண்ணனுக்கு.

யசோதை என்ன செய்வாள் இந்த ஸமயத்தில்? என்பதை ஒவ்வொருவரும் யசோதையாக இருந்து அனுபவித்தால்தான் அறியலாம். அவனிடம் இரக்கப்படுவதா? கோபிப்பதா? மகிழ்வதா? அல்லது அப்பெண்கள்மேல் இரக்கப்படுவதா? அவர்களைக் கோபிப்பதா? உகப்பதா? கொண்டாடுவதா? அல்லது தன் அதிர்ஷ்டத்தைக் கண்டு மகிழ்வதா? அல்லது தன் அறியாமையைக் கண்டு வெள்குவதா? அல்லது இரங்குவதா? என்று ஒன்றும் புரியாமல் தவிப்பாள் யசோதை. எல்லையில் மாயனுடைய சொல்லும் செயலும் அறியமுடியாதவையன்றோ? இப்படி ஒரு நாளா, இருநாளா? பல நாள் நடக்கும். கண்ணனைக் கோபித்தல் தம் தம் கண்ணையே கோபிப்பதையொக்கும். இதையந்த மங்கையர் நன்கறிவார்கள். அவனிடம் அபரிமிதமான ப்ரியமுடையவர்கள் அவர்கள். அப்படியிருக்கையில் அவனையேன் கோபித்துக்கொள்ளவேண்டும்? அதுதானே புரியவில்லை. அதுமாத்திரமா? நேரே காணும் போது உடலையும், உயிரையும், அறிவையும், நினைவையும் உருக்கிப் பரவசப்படுத்தும் கண்ணன் எதிரிலில்லாதபோது ஏன் அவனிடம் கோபம், வெறுப்பு, அவமானம் முதலிய உணர்ச்சிகள் உண்டாகவேண்டும்? இந்த விஷயங்களில் அந்த ஆயர் மங்கையருக்கும், யசோதைக்கும் சிறிதும் வித்யாஸமில்லை.

இந்த நிலையில்தான் ஒருநாள் கண்ணன் யசோதையிடம் வந்து தன்னை ஆயர் சிறுவர்களோடு கன்று மேய்க்கக் காட்டுக்கு அனுப்பும்படி கேட்டான். கண்ணனாவது, கன்றுமேய்ப்பதாவது! முதலில் இதை நினைத்துப் பார்க்கவே யசோதையின் உள்ளம் கூசியது. கண்ணனோ விட்டபாடில்லை. மறுபடி மறுபடி கேட்டுக்கொண்டேயிருந்தான். இது ஏன் கண்ணன் மனதில் தோன்றவேண்டும்? ராஜா வீட்டுப் பிள்ளையாயிற்றே அவன்! அவன் அந்த வேலை செய்யலாமா? மேலும் நம் கண்ணைவிடக் கண்ணன் அருமையாயிற்றே. அவன் திருமேனி கானகத்தின் வெயிலைத் தாங்குமா? இப்படியெல்லாம் சிந்தித்த யசோதை கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்தாள். கன்றுகள் மேய்க்கச் செல்லாவிடினும் அவன் வீட்டிலே தங்கியிருக்கிறானா என்ன? தினம் தினம் அவன் காலடி படாத ஓரிடம் ஆயர்பாடியிலே இல்லை. அத்துடன் அவன் மேல் கூறப்படும் குற்றங்களுக்கு ஓர் எல்லையுண்டா? ஊரிலும்

வெயிலுண்டு, கானகத்திலும் நிழலுண்டு; ஊரில் ஆய்ச்சியர்கள் புகார்கள் உண்டு, கானகத்தில் அது இல்லை. ஆதலால் கானகத்திற்கு அனுப்புவதும் ஒரு விதத்தில் நல்லதுதான். அவன் சில நாளாவது இந்த ஊரில் பகலில் இல்லாதிருந்தால்தான் அவனுடைய அருமையும் பெருமையும் ஊராருக்குத் தெரியும் என்று ஓர் முடிவுக்கு வந்துதான் கண்ணனுக்கு கன்றுகள் மேய்க்க உத்திரவு கொடுத்தாள். கண்ணனும் சென்றான். யசோதை அடியோடு நிம்மதியிழந்தாள். வீட்டில் ஒரு வேலையும் புரியவில்லை. மனம் குழம்பித் தவிக்கிறது. காடும், கன்றுகளும், கல்லும், முள்ளும் நிறைந்த பாதையும் அதில் தன் கண்ணன் மலரடி சிவக்க ஓடிக் கன்றுகளை வளைப்பதும் கண்ணெதிரே தோன்றி வாட்டுகின்றன. ஏனோ கண்ணனைக் கன்று மேய்க்க அனுப்பினோம் என்று நினைந்து நைந்து தவிக்கிறாள். வீட்டில் ஓர் இடத்தில் உட்கார்ந்து ப்ரமை பிடித்தவள் போல் இருக்கிறாள்.

அப்போது சில ஆயர் மங்கையர் வருகிறார்கள் அங்கே. அடேயப்பா! என்ன அழகு அவர்களுடைய கூந்தல் ஒன்றே போதும் பிறரை வசப்படுத்த. பெண் மக்களைக்கூட வசப்படுத்தும் அழகியர்கள் கூந்தலுக்கு அலங்காரமும் செய்திருக்கிறார்கள். வந்தவர்கள் யசோதைக்கு குசலப்ரச்னம் செய்கிறார்கள். யசோதையால் பதில் சொல்லமுடியவில்லை. சொல்லாதிருக்கவும் இயலவில்லை. ஏதோ ஞாபகத்தில் ஏதோ சொல்லுகிறாள். கண்ணனின் நினைவு அவளை இழுத்துச் சென்றிருக்கிறது. வந்த பெண்களும் இதை உணராமலில்லை. அவர்களும் அவனைப் பார்க்க வந்தவர்கள்தாம். அவனை ஒரு நாள் ஒரு பொழுது தெருவிலோ தங்கள் வீட்டிலோ காணவிட்டால் அவர்களுக்கு நிலை கொள்ளாது. ஆனால் கண்ணனைத் தேடித்தான் இவ்விடம் வந்தோமென்று பஹிரங்கமாகச் சொல்லவும் கூச்சப்படுகிறார்கள். இந்த ஸமயத்தில் யசோதையின் அந்தரங்கத் தோழி ஒருத்தி வருகிறாள். அவள் மற்றவர்களைப்போல் சுற்றி வளைத்துப் பேசாமல் யசோதையிடம் பேசுகிறாள். 'ஏனடி யசோதா! ஒரு மாதிரியாக இருக்கிறாயே. உடம்புக்கு என்ன?' என்று. அவளைக் கண்டவுன் யசோதைக்குத் தன் மனத்திலுள்ள வருத்தம் வெளியே ஆரம்பித்தது. அத்துடன் அவள் பேச ஆரம்பித்துவிட்டாளே. பதில் சொல்லும்போதோ யசோதையின் தொண்டை கரகரத்தது. கண்ணன் என்று பேச ஆரம்பித்தவள் கண் என்ற சொல்லுக்கு மேல் பேச முடியாமல திணறுகிறாள். உடனே பெண்களில் சிலர் கண்ணனுக்கு என்ன மாமீ! என்கிறார்கள். ஒன்றுமில்லை; கண்ணனை .... என்று பேச ஆரம்பிக்கிறாள் யசோதை நிதானப்படுத்திக்கொண்டு. அந்த அந்தரங்கத் தோழி கேட்கிறாள் என்ன? கண்ணனுக்கு என்ன? அவன் எங்கே? இத்தனை நேரமாகப் பார்க்கிறேன். அவன் எங்கே? ஊரிலும் அவனைக் காணவில்லை என்று கேள்விமேல் கேள்வி போடுகிறாள். வந்திருந்த நங்கைகளுக்கு ஓர் பெரிய சுமையை தலையிலிருந்து இறக்கியது போலிருந்தது. அப்பப்பா! எவ்வளவு நேரமாகக் கேட்கக்கூசியிருந்த வார்த்தையை இந்த மாமி கேட்டுவிட்டாள். நல்லது யசோதா மாமி சொல்லும் பதிலைக் கவனிப்போம் என்று யசோதையையே பார்க்கிறார்கள். சிலர் நாங்கள் கூட நினைத்தோம் என்றும், வேறு சிலர் நாங்கள் கூட கேட்கவேண்டுமென்றிருந்தோம் என்றும் பஹிரங்கமாகவே சொல்லிவிட்டார்கள், அவர்களை அறியாமல் வார்த்தை பிறிட்டுக்கொண்டு வந்தது. இவைகளைக் கேட்ட யசோதை கண்ணீரையாறுகப் பெருக்கிவிட்டாள். கதறியும் விட்டாள். அக்கதறலுக்கு இடையே கண்ணன் கன்று மேய்க்கப் போனதைக்கூடச் சொல்லிவிட்டாள். அவ்வளவுதான் யசோதை ஒருத்தி பட்ட பாட்டை அத்தனைபேரும் பட்டார்கள். 'ஏண்டீ கண்ணன் போனான்? அவன் போகலாமாடீ காட்டுக்கு? அவன் திருமேனி தாங்குமா? எப்படியடீ மனம் துணிந்தது? இது யார் செய்த பாவமடீ? என்று அந்தரங்கத் தோழி கூறுகிறாள். அந்தப் பெண்களின் நிலைமை மிகவும் நைந்து உருகிப் போயிற்று. 'ஐயோ கண்ணனும் கன்று மேய்க்கப்

போவானோ? தினமும் என்வீட்டிற்கு வருவானே தொந்தரவு செய்யாதே போடா என்பேனே பாவி நான். என் பாவம்தான் அவன் காட்டிற்குப்போனான்' என்பார் சிலர். 'என் பின்னலைப் பிடித்திழுக்காதே உன் அம்மாவிடம் சொல்கிறேன் என்பேனே; பாவி நான். என் பாவம்தான் அவன் போனான் என்பார் சிலர். 'இந்தப் பூவை உங்கள் தலையில் வைத்துக் கொள்ளுங்கள் என்பான்; வேண்டாம் என்பேன். சரி, நீங்கள் சும்மா இருங்கள் நானே வைத்துவிடுகிறேன் என்று வலுவில் வைப்பானே. என்ன தடுத்தும் கேட்கமாட்டானே என் பாவம் தானோ அவன் காடு சென்றது? என்பார் சிலர். 'உனக்குத் தலையலங்காரம் செய்துகொள்ளத் தெரியவே இல்லை. என் தலையைப் பார். எவ்வளவு நன்றாக இருக்கிறது? நான் செய்கிறேன் பார் உன் கூந்தல் அலங்காரத்தை என்று வந்து பிடித்துக்கொள்வான் என் கூந்தலை. கோபிப்பேன்; அப்போதும் போகமாட்டான். ஐயோ பாவி நான். அவன் பெருமையறியாது போனேனே. என் பாவமேதானோ அவன் சென்றது?' இப்படி அவர்கள் கூறும்போது யசோதை அவர்களைப் பார்க்கிறாள். எல்லோர் கண்களிலும் நீர் நிறைந்து வழிந்தோடுகிறது. சிலர் பேசமுடியாமல் என் கண்...... என் கண் என்பதோடு விக்கி விக்கித் திணறுவார்கள். யசோதைக்கு இப்பொழுது சிந்தனை வேலைசெய்ய ஆரம்பிக்கும். கண்ணனைப்பற்றி தினம் குறை கூறுபவர்கள் தானே இவர்கள். ஏன் இப்படி நைந்து உருகுகிறார்கள் என்று சிந்திப்பாள். இதற்குக் காரணம் அவளுக்குப் புரியாது. தானேயப் படித்தானே என்ற எண்ணமும் தோன்றும். காட்டின் முட்கள் கண்ணன் திருவடியில் தைப்பதை அவரவர்கள் கண்களில் தைப்பதாகத்தான் அனைவரும் நினைக்கிறார்கள். இதை யோசிப்பாள் யசோதை. தன் தோழியை நோக்கிக் கூறுகிறாள். 'அழகான கரும் கூந்தலையும் கூந்தல் அலங்காரத்தையும் உடைய அழகிய பெண்கள் வந்து அவன் மேல் குறை சொல்லும்படி அவன் இங்கு ஆயர்பாடியெங்கும் திரியாமல் கண்ணுக்கு விருந்தாகும் அவனை கண்ணைவிட அருமையாகப் பாவிக்கப்படும் அக் கண்ணனைக் காட்டிலே கல்லும் முள்ளும் நிறைந்த வழியிலே கன்றுகளை மேய்க்கவும், ஓடும் கன்றுகளை மடக்கவும், பாவி நானே தான் அனுப்பினேன். அழகிய கூந்தலையுடைய மாதர்காள்! இங்கே வந்து என்னைத் திட்டும்படி எவருடைய சிந்தனைக்கும் எட்டாத அந்த மஹா மாயா லீலைகள் நிறைந்த என் மகன் கண்ணனை நானேதான் அனுப்பினேன் காட்டிற்கு. தோழீ! இது என் பாவமேதான் என்று கூறி கதறுகிறாள்.

இந்த அனுபவத்தைத் தானே யசோதையாக இருந்து பாடியனுபவிக்கிறார் பிள்ளைத் தமிழ் பாடும் பேரறிவாளனாகிய பெரும் புகழ் பெரியாழ்வார்.

வண்ணக் கருங்குழல் மாதர் வந்தலர் தூற்றிடப்
பண்ணிப் பல செய்திப்பாடி யெங்கும் திரியாமே
கண்ணுக் கினியானைக் கானதரிடைக் கன்றின் பின்
எண்ணற் கரியானைப் போக்கினேன் எல்லே பாவமே

குறிப்பு:— வண்ண— அழகான, அலங்காரம் நிறைந்த; அலர் தூற்றல்— குற்றம் கூறல்; பாடி— ஆயர்பாடி; கண்ணுக்கினியான்— பார்ப்பதற்கினிமையானவன், கண்ணைக் காட்டிலும் அருமையும் இனிமையும் உடையான்; கானதர்— காட்டு வழி; எண்ணற்கரியான்— எண்ணுதற்கரிய மஹிமை உள்ளவன்; எல்லே — தோழீ.

ஸ்ரீ:

திருப்பாவையும் ஸ்ரீபாஷ்யகாரரும்

‘திருப்பாவை’ என்ற ஸ்ரீஆண்டாள் அருளிச்செய்த உபநிஷத்ஸாரமான திவ்யப்ரபந்தத்தைப்பற்றி ஸ்ரீவைஷ்ணவதாஸ்யாம்ருதரஸிகர்களெல்லோரும்அறிவார்கள். இம்மந்திரமணைச் சொன்மாலை ஸதாசார்யகடாக்ஷத்தாலே சுத்தாந்தஸித்தாந்தத்தைப் பெற்ற சேதனன் ஸஹ்ருதயர்களை ‘ஸத்வஸ்தாந் நிப்ருதம் ப்ரஸாதய ஸதாம் வ்ருத்திம் வ்யவஸ்தாபய’ என்றபடி ஸித்தாந்திகளாக்கி பகவதாஜ்ஞாநுஜ்ஞா பரிபாலனரூபகைங்கர்யங்களை பகவத்ப்ரீதியுடன் பாகவதர்களையும் கூட்டிகொண்டு செய்து ச்ரிய:பதியை வசீகரிப்பதற்காக தங்களுக்கு நியதமான கைங்கர்யத்தை அபுநராவ்ருத்தியோடு விரும்பி அதற்காக பகவானிடம் ச்ருதிசோதிதமான ப்ரபத்தியையநுஷ்டித்து அவ்வுபாயத்தால் தங்களுடைய சேஷவ்ருத்திகளுக்கெல்லாம் ப்ரத்யக்ஷதர்சன ஸமானாகாரத்யானவிஷய சுபாச்ரயதிவ்யமங்களவிக்ரஹோபேதனாய் பரமசேஷியும், பரமகாருணிகனுமான எம்பெருமானை ப்ரதிஸம்பந்தியாகப் பெறவேண்டுமென்று தெரிவிக்கிறது.

இக்கோதாதத்வம் பிராட்டியின் தத்வம்; அதாவது ஸர்வஸ்மாத்பரனான ஸ்ரீநிவாஸன் தத்வம். ‘அஸ்யேசானா ஜகதோ விஷ்ணுபத்நி போகமோக்ஷப்ரதாயிநீ’ என்ற ஆண்டாளும், ‘ஸ்வார்ஹகர்மப்ரஸாதய:’ ‘ஸ்வாத்மபாவேந ஸேவ்ய:’ என்ற கொண்டல் வண்ணக் கோவலனும் சேர்த்தியில் மாலை மாற்றிக்கொண்டு தங்கள் சேஷர்களான ஜீவாத்மாக்களிடத்தில் கருணையைப் பொழியும் தத்வம். சரணாகதி தர்மம் வ்ருத்தியாகி சேதனர்களெல்லாம் மன்னு வடமதுரை மைந்தனைச் சரணமாக வரித்து அவ்வாதியஞ்சோதியின் துயரறுசுடரடிக்குத் தொண்டு பூண்டு மீளாத பேரடிமைக்கன்பு பெறும் உபாயத்தை விளக்குவதே திருவான கோதையின் அவதாரத்திற்கும் அவளருண்மொழியான திருப்பாவைக்கும் ப்ரயோஜனமாகிறது. ‘ஏஷஹ்யேவாநந்தயாதி, என்றபடி புருஷோத்தமனான எம்பெருமான் இக்கோதையின் ஸம்ச்லேஷத்தால் ஆனந்தமயனாய் ஆச்ரிதஜனரக்ஷகயாகத்திலிறங்குகிறானென்று திருப்பாவை காட்டிக்கொடுக்கிறது. இவ்வர்த்தத்தைத்தான் ‘காம்ஸோஸ்ப்யா’ மென்று ஸ்ரீஸூக்தம் முழக்கம் செய்கிறது.

ப்ரதமஸூஜனனும், கவியுமான பரிமுகப்பரமன் கண்ணனாயவதரித்து அர்ச்சுனனை வ்யாஜமாக்கி தன்னடியார்களுக்கு உபதேசமாய்ப் பாடிய கீதோபநிஷத்தைப் போல பிராட்டியின் அம்சமான சுடர்க்கொடி தன் ஸகிகளான கோபிகளை வ்யாஜமாக்கி ச்ரிய:பதியின் ஸ்வரூபரூபகுணவிபூதிகளைப்பற்றிபரக்கப் பேசி உபதேசித்த கோதோபநிஷத்தே திருப்பாவை. அகலகில்லேனென்றுறையும் அலர்மேல்மங்கையான நம் தாமரைக் கோயிலாள் தன் வாக்கையும் அருளையும் ஸர்வமங்களத்தையுமளிக்க, விஷ்ணுசித்தரான ஜனகராஜனின் தூய திருமகளாய்ப் பூமியைப் பிளந்து கொண்டு அவதரித்து ‘காடோபகூடாநி தே’ என்று பகவானோடு சேர்த்தியில் புருஷகாரபூதையாய் ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரியானாள். அவ்விதமே அவள் ஸஹஜையான கோதையும் விஷ்ணுசித்தரான பட்டர்பிரான் குலநந்தனகல்பவல்லியாய் பொறுமையே வடிவாய், இன்னமுதத்தமுதாய் ஸர்வலோகயோகக்ஷேமத்திற்காக ஸம்ஸாரிகஜனங்களைத் திருத்திப்பணிகொள்ள நந்தவனத்தில் அயோநிஜையாய் அவதரித்து தன் பெயரான கோதா என்னும் சப்தத்தின் அவயவப் பொருளாகிய ‘யோசத்தை’ பகவானோடு அனுபவித்தாள். இக்கமலக் கலைமகளின் பெயரை ‘கோதா இத்ரேவதோ மத:’ என்று ச்ருதியும் ஓதிற்று. ஸ்ரீநிவாஸனின் கருணையான திருமகளே பெரியாழ்வார் தவவெள்ளமுருக்கொண்ட கோதையாம். இக்கோதாதேவியும் ‘மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்’ ‘இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்’ என்று பாமுப்பதால் வேதத்தை வ்யாகரித்து ஆசார்யத்வத்தையும் வஹித்தாள். இல்லீலாவிபூதி எங்

கும் திருவருள் பெற்று இன்புறும்படி கோபிமார்களையநுகரித்துத் தன் நோன்பினால் அரங்கனைப் பணிந்து அவள் சூடிக்கொடுத்த மாலையே திருப்பாவையாயிற்று. ஔபநிஷதபரமபுருஷனும் மிகவும் உகந்து தன் சிரஸ்ஸில் தரித்துக்கொண்ட இம்மாலை அடியார்க்கெல்லாம் முக்திக்கருள் சூட்டி பகவான் திருவடி நோக்கும் மற்ற உபநிஷத்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமான மஹோபநிஷத்தாயிற்று.

பகவத்ராமானுஜரான ஸ்ரீபாஷ்யகாரரைப் பற்றி நாமெல்லோரும் தெரிந்துகொண்டிருக்கிறோம். பரவாஸுதேவனின் பஞ்சாயுதாவதாரமாய் பரமவைதிகமான நம் விசிஷ்டாத்வைத ஸத்தர்சனத்தைப் போற்றி வளர்த்து, நிலை நாட்டித் தன் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களையெல்லாம் பரப்ரஹ்மாநுபவம் அடையும்படிச் செய்து ஸர்வலோகயோகக்ஷேமத்தைக் கொடுத்த ஸர்வமங்களநிதி இவர்தானென்று விளம்புவது உண்மையையுரைப்பதே. லக்ஷ்மீநாதன் தொடங்கி அஸ்மதாசார்யபர்யந்தமான குருபங்க்திக்கு குருநாயகமாய் விளங்கி குத்ருஷ்டிகளையடக்கி ஆரணநூல் செவ்வையையழித்த மோஹனமாயாமதங்களை நிரஸித்து, போதாயனஸூக்திகளையநுஸரித்து ச்ருதிகளின் ஸூக்ஷ்மார்த்தத்தை நிலை நிறுத்தி ஸர்வோபநிஷத்ஸாரமாயும், ப்ரஹ்மஸூத்ரவிவரமாயும் வேதங்களின் வாஸ்தவார்த்தமாயுமுள்ள மஹார்க்ரந்தமான ஸ்ரீபாஷ்யத்தை யருளிய கருணாநிதி இவரே. மறைவிளக்கி மறை புகட்டி மறையின் நிதியோதியும் மறைவிளக்கும் மெய்ப் பொருளை லக்ஷ்மீகாந்தஸ்படிகமுகுரோ லக்ஷ்மணார்யோபதேச:' என்றவாறு காட்டியும் கொடுத்த இவ்வெம்பெருமானார்க்கு எம்பெருமான் தன்னிருவிபூதிகளையுந்தந்துஉடையவராக்கினனல்லவா? மொழியைக் கடக்கும் பெரும்புகழானென்ற இவ்வெதிராஜன் 'சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள் நான்கும், எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன். வ்யாஸாதிகளைப் போல் ஆசார்யநிலையநுஷ்டானமுள்ள தத்வதர்சி. பகவத்பாகவத கைங்கர்யங்களில் பேரவாக்கொண்ட லக்ஷ்மணமுனி அரங்கனின் பக்தஜன மானஸராஜஹம்ஸம். இவருடைய கல்யாணகுணங்களைப்பற்றியும் இவரது ஸூக்திகளின் பெருமையையும், உபய வேதாந்தங்களுக்கு இவர் பணித்திருக்கும் மஹோபகாரத்தைப் பற்றியும் சொல்ல இயலாது. இவ்வற்புதந்தோன்றியவுடன் நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன. நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது. கலியின் கொடுமையகன்றது. பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும் தெரிவிக்கும் ஸத்தர்க்கதந்த்ரபரிகர்மிதமான சாரீரகசாஸ்த்ரத்தைக் கொடுத்து முக்திக்கருள் சூட மூன்றைத் தெளிமுன்னம் இத்திக்காலேற்குமிதமான சரணாகதியைக் காட்டிக்கொடுத்த வள்ளல் இவரல்லவா? மூவுலகின் புண்ணியபலனாக வந்த இப்பெருந்தகையைப் பெற்ற நாம் 'அஹோ! பாக்யம், அஹோ பாக்யம்' என்று குதூஹலித்து ,ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்' 'ஜயதி யதிராஜஸூக்தி: ஜயதி யதிராஜபாதுகாயுகளீ' என்று உத்கோஷித்து அவருக்குப்பல்லாண்டு பாடுவோமாயின் 'ஸித்திர்பவதி வா நேதி ஸம்சயோச்யுதஸேவிநாம் | ந ஸம்சயோத்ர தத்பக்த பரிசர்யாரதாத்மநாம் ||' என்றபடி ஜந்ம ஸாபல்யமடைவது திண்ணம்.

திருவான கோதைக்கும் அவளருளிய பாவைக்கும், ஸ்ரீபாஷ்யகாரருக்கும் அவரளித்த ஸ்ரீஸூக்திகளுக்குமுள்ள ஸாரூப்பங்களையும் கருத்துக்களின் ஸம்பந்தங்களையும் ஆராய்ந்துபார்த்தால் அனேகவின்பரஸபாவங்களை யநுபவிக்கலாம். இவையிரண்டிலுமுள்ள குணவிசேஷங்களை ஒப்பிட்டு அறிவது இவ்ய தம்பதிகளின் குணாநுபவம் செய்து பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிக்கிடப்பதே. வேதவித்தான திருப்பாவையின் அழகான லக்ஷணங்களையும் அந்யாத்ருசமான பாவங்களையும் யதிபதியின் நிகமநீதங்களின் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். கோதையின் சங்கத் தமிழ் மாலை முப்பதும் ச்ரிய:பதி தொடங்கி எல்லா ஆழ்வார்களுடைய அவிச்சின்ன ஸம்ப்ரதாயங்களாய் பகவத்கீதா பாஞ்சராத்ரஸாரமாய் புது மெருகு பெற்றுப் பிரகாசிப்பதைப்போல் உடையவரின் ஸ்ரீபாஷ்யநிஜாக்ஷரங்கள் பக

வான்முதல் எல்லா ஆழ்வாராசார்யர்களுடைய அவிச்சின்னஸம்ப்ரதாயங்களாய் ஸர்வசாஸ்த்ரஸாரமாய் விளங்குகின்றன.

கோதையுரை குடிகொண்ட கருத்துடைய பாஷ்யகாரருக்கு ‘திருப்பாவை ஜீயர்’ என்றதோர் அஸாதாரணமான திருநாமம் உண்டாம். இவர் பாமாலை பாடிக்கொடுத்த நீளாதேவியின் தொல்லருளால் வாழ்ந்த வள்ளல் என்றும், அப் பங்கயமாமலர்பாவையின் திருவடி நிலையென்றும் அமுதனாரின் அருள்மொழி. நம் எதிராஜன் திருப்பாவையை விசேஷ ப்ரீதியுடன் அநுஸந்தானம் செய்வாராம். ‘உந்து மதகளிற்றன்’—என்ற பாசுரம் அவருக்கு அத்யந்த ப்ரியதமமானதென்றுமோர் ஐதிஹ்யம் உண்டு. விபவதசையில் ஒருநாள் திருப்பாவையநுஸந்தானத்துடன் பிக்ஷாடனம் செய்யும் அவஸரத்தில் இந்த பாசுரத்தை ஸேவித்தவராய் பெரிய நம்பி திருமாளிகை வாசலில் எழுந்தருள, கதவைத் திறந்து கொண்டு வந்த துழாயை சீரார்வளையொலிப்ப வந்த நப்பின்னையென்று பாவித்து தன் திருவடிநிலைகளை உடனே விலக்கினாராம் அவரது திருவடி ஸம்பந்தம்பெற்ற பூமியின் மாலிங்யங்கள் நிவ்ருத்தமாய் ஸர்வமங்களமும் உண்டாயிற்றென்று பெரியோர் பணிப்பர். ஆண்டாளையும் ‘பெருபூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே’ என்றவாறு பெரியாழ்வார் திருமகளான மேன்மைக்கு மேல் இராமாநுஜனைத் தம் முன்னாக அபிமானித்த எற்றமுடையவளென்றும், மஹான்களின் அநுபவம்

கோதையின் திருப்பாவை பாஷ்யகாரரின் தர்சனத்திற்கு ஆரம்பமாய் (ஸ்வரவிசை) அமைந்தது ஓர் அத்யத்புத ரஸம். யதிவரரின் ஸூக்திகள் ஸம்ஸாரதேஹிகளை பகவத்குண வெள்ளத்தில் நீராடும்படி உணர்த்துவதைப் போல், ‘நீராடப்போதுவீர்’ என்று தொடங்கும் திருப்பாவையும் பகவத்பக்தி ப்ரவாஹத்தில் ஸஹ்ருதயர்களை நீராடும்படி செய்யும் நீராட்ட ஸரஸ்வதி. உடையவரின் ப்ரதான ப்ரதிதந்த்ரத்தை ஆண்டாள், தன் மதுரமான கிளிமொழியால், ‘எற்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோ’மென்று பாடினாள். நம்மாழ்வார் பெரியாழ்வார்களைப்போல் கிருஷ்ணாவதாரத்தில் ஊன்றிடவளாய், ராமாநுஜனைப்போல் ச்ருதியின் உட்கருத்துக்களை தன் திருப்பாவையில் ப்ரகாசப்படுத்தியிருக்கிறாள் நம் க்ஷமாதேவி. ஸ்ரீ பாஷ்யகாரர், பரப்ருஹ்மத்தை நிர்குணம் என்று சொல்லி, அவித்யையைக் கல்பித்து அவன் விபூதிகளையும் மித்யை என்று அபலாபம் பண்ணின மோஹன மாயாதர்சனங்களை வேரோடு பிடுங்கி எறிந்து, ப்ருஹ்மவிபூதிபூதமான ஸர்வ பதார்த்தத்தையும் ஸத்யம் என்று ஸ்தாபித்து எப்படி பரதத்வநிர்ணயம் செய்தாரோ, அப்படியே அகில ஜகன்மாதாவான கோதாவும் தன் திருத்தகப்பனாரான பெரியாழ்வார் பரதத்வநிர்ணயம் செய்ததை யதிகரித்தவளாய், ஸர்வரஸ ஸர்வகந்தனான எம்பெருமானுக்குத் தன் மாலைமணத்தைக் கொடுத்து, அவனையே மணஞ்செய்து அவனே பரதேவதையென்று புதுமணமூண்டாகும்படி தங்யனாக்கினாள்.

இன்னும் ஸர்வகர்மங்களையும் அவச்யமநுஷ்டிக்கவேண்டுமென்றும் பலகர்மகர்த்ருத்வாதிகளை த்யாகம் செய்யவேண்டுமென்றும் ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யங்களில் நம்மிராமாநுஜன் வற்புறுத்தியிருப்பதைத் திருப்பாவையில் காண்கிறோம். ஆழ்வார் மூலமாய் வந்த ஸம்மந்த்ரமான த்வயத்தை, உடையவர் கத்யமுகத்தாலே யுயதேசித்துக் காட்டியதை, திருப்பாவை ஸ்வரஸமாய் நமக்குப் புலப்படுத்துகிறது. அதிலிருக்கும் ‘மாயனை’ என்ற ஐந்தாம் பாசுரம் ப்ரபதனரூப ஸாத்யோபாயத்தை வெளியிடுகிறதென்று பூர்வாசார்யர்களருளிச்செய்தார்கள். கோதையும் ராமாநுஜனைப்போல் தன்னோடில்லாமல் தன்னநுபந்திகளான பகவதநுபவஸஹகாரிகளுக்கு நிர்வாஹகராய் கண்ணனைச் சரணமடைகிறாள். அத்யந்த ப்ரீதியுடன் மெய்யடியாராக பகவத்பாகவத கைங்கர்யங்களைச் செய்யவேண்டுமென்று யதிபதி தன் நித்யக்ரந்தத்தில் கற்பித்த விஷயம் ஸ்ரீ ஆண்டாளருளிய ‘வையத்துவாழ்வீர்காள்’ என்ற பாசுரத்தின் எதிரொலிதான். ஸஹஜ காருண்யமூர்த்தியும் ஸித்தோபாயனுமான பகவானை வசீகரிக்க வ்யாஜமானதோருபாயம்.

வேண்டியதுதானென்று கோதையும்தானநுஷ்டித்த நோன்பினுல் உணர்த்துகிருள். தன் திவ்யத் தமிழ்மாலேயில், பகவத் கைங்கர்யமே நிலேநின்ற புருஷார்த்தமென்றும், நதஸத்யஞன எம்பெருமான், தன்னேச் சரணமாக அடைபவர்க்கு அந்த புருஷார்த்தத்தை ‚மோக்ஷயிஷ்யாமி மாசுச:' என்று கொடுத்தருள்வானென்று கோதை மொழிந்ததை, ஸ்ரீபாஷ்யகாரர் தன் கத்யத்தில், ‚நித்யகிங்கரோ பவாநி, பவ, பவிஷ்யஸி' என்று எவ்வளவு அழகாகப் பணித்தருளுகிருர் பாருங்கள். திருப்பாவையில் காணக்கிடைக்கும் தாத்பர்யரத்னங்களின் ப்ரதிகள் கீதாபாஷ்யத்தில் செவ்வனே பதிக்கப் பெற்று ப்ரபையுடன் சோபிக்கின்றன.

பட்டர்பிரான் கோதைக்கும் கண்ணனுன வாஸுதேவனுக்கும் நடந்த திருப்பாவையென்ற பாமாலேயும் பூமாலேயுமான மாற்றமே லோகோஜ்ஜீவனத்திற்காக லக்ஷ்மீபதிக்கும் பதிபதிக்கும் நடந்த சரணுகதிமந்த்ர ஸாரஸம்வாதபரிமாற்றம். தர்மகர்மாநுஷ்டானங்களினுல் பாபங்களே யுதறிவிட்டு, பகவச்சரணுரவிந்தத்தில் ப்ரபத்தி செய்து காமம் தலேக்கொண்டு கண்ணனே குணுநுபவம்செய்து அநுபவியுங்கள் என்று ஆண்டாள் உணர்த்திபதை நம் பகவத்பாஷ்யகாரரும், ‚கண்ணனுக்கேயாமது காமம். இக்காமம் கிடைப்பது அரிது. அறம் பொருள் வீடு மூன்றும் இதற்காகத்தான் என்று உரைத்தாரென்பாராம் அரங்கத்தமுதன். அதாவது பேரின்பமாகிய பகவத்காமமே பரமபுருஷார்த்தம். மற்ற புருஷார்த்தங்கள் இக்காமத்திற்கு சேஷமாய் உபகாரகமாகின்றன வென்று மெய்யறிவு புகட்டுவராம். திருப்பாவையும் சரணுகதிகத்யம்போல் பிராட்டியுடன் ஆரம்பித்து, பிராட்டியோடு, ‚எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்' என்று முடிகிறது. கடைசியாக 'மறைகடைந்தெழில் மணமிசைத்தமிழான' திருப்பாவை, சேதனனுக்கு வேண்டியது சேஷவ்ருத்தியான பகவத்கைங்கர்யந்தானென்றும், இதில் ப்ராப்யருசியையும், ப்ராப்யந்தானின்னது என்னுமிடத்தையும் எம்பெருமானே அளிக்கவேண்டுமென்றும், சேதனனின் ப்ராப்யத்வரையையும் அறிவித்து, இம்மாலேயை யநுஸந்திப்பவர் மீளாத பேரடிமைக்கு அன்பு பெறுவர் என்று மங்களகீதம் ஒலிக்கிறது.

திருப்பாவை அருள் பொலியும் ப்ரபந்தம். அதற்கு விஷயம் காருண்யராசியான ரங்கராஜனும், காருண்யஸீமாவான ஸ்ரீயும். அதை யுபதேசித்தவள் அருளெனும் சீரார் அரிவை யாம் ஆண்டாளென்ற அபாலக்ஷ்மி. அதை யோதி யுணர்ந்து மகிழ்ந்தவரும் ஸ்ரீபாஷ்யகாரரென்ற பரமகாருணிகர். ஆகவே திருப்பாவையையும் பாஷ்யகாரரையும் சேர்த்தநுஸந்தானம் செய்வது, நிரவதிகதய ஸ்ரீஸகஸ் ஸர்வசக்தியான ஸ்ரீநிவாஸனின் தயாதேவியினிடம் அடைக்கலம் புகுவதே. கரைபுரண்ட கருணேக்கடலான நம் தேசிகமன்னன் அருளியவாறு, இத்தயையே ம்ருதுவான ஹ்ருதயத்தோடு, சேதனனின் இருவினேகளேயும் இதமோடகற்றி, ஸம்ஸாரமூலத்தை ஹரணம் செய்து ஸர்வமங்களத்தையும் நம்மெல்லோருக்கும் அளிக்கிருள். தன்னேரில்லா மாணிக்கமும் ப்ரஸாதகுணமுடையதுமான நம் ச்ருத்யந்த தேசிகமாமணியின் நர்த்தடகதேவகானத்தைப் பாடி மகிழ்வோமாக.

ம்ருதுஹ்ருதயே தயே ம்ருதிதகாமஹிதே மஹிதே
த்ருதவிபுதே புதேஷு விததாத்மதுரே மதுரே ।
வ்ருஷகிரிஸார்வபௌமதயிதே மயி தே மஹதீம்
பவுகநிதே நிதேஹி பவமூலஹராம் லஹரீம் ॥

—o—

ஸ்ரீ:

செய்தி

ஸ்ரீ அஹோபில க்ஷேத்திரம்

கர்நூல் ஜில்லாவில் கருடாத்ரியின் மத்தியில் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரம் அமைந்துள்ளது. அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் பவநாசினிக் கரையில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிறான். இந்த க்ஷேத்ரத்தில் ஒன்பது மூர்த்திகளாக எம்பெருமான் ஸேவை ஸாதிக்கிறான். திருமங்கைமன்னனால் 'சிங்கவேழ்குன்றம்' எனக் குறிப்பிட்டுள்ள பாசுரங்களில் பாடிப் புகழப்பட்டவன் எம்பெருமான்.

இந்த க்ஷேத்ரத்தின் மஹிமை ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனால் நவீன உலகத்தோற்கு வெளியாகியிருக்கிறது. இந்த க்ஷேத்ரத்தை நேரில் கண்டு, எம்பெருமானை ஸேவித்தவர்களுக்குத்தான் இதன் பெருமை தெரியவரும்.

ப்ரதிவர்ஷமும் மாசி மாதம் சுக்ல பஞ்சமி முதல் பத்து தினங்கள் மலைமேலுள்ள மேல் அஹோபில க்ஷேத்ரத்திலும், அடிவாரத்தில் உள்ள கீழ் அஹோபிலக்ஷேத்ரத்திலும் வெகு விமர்சையாக ப்ரஹ்மோத்ஸவங்கள் நடந்து வருகின்றன. கோடிக்கணக்கில் ஜனங்கள் சென்று ஸ்ரீந்ருஸிம்ஹனை ஸேவித்துக் களிக்கிறார்கள்.

இந்த க்ஷேத்ரத்தின் ஆதீனம் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் காலம் முதல் ஸ்ரீ அஹோபிலமடாதிபதிகளிடமிருந்து வருகிறது. சிலவர்ஷகாலமாக இந்த க்ஷேத்ரத்தின் புநருத்தாரணத்துக்கென்றே ஏராளமான ரூபாய்களை, ஸ்ரீமதஹோபிலமடாதிபதிகளாகிய, ஸ்ரீ அழகியசிங்கர்கள் செலவு செய்து வந்திருக்கிறார்கள்.

ஸுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு தடாகத்திலிருந்து கீழ் அஹோபிலக்ஷேத்ரத்துக்கு சிமெண்ட் குழாய்களை அமைத்து, அதன் மூலமாகவே நல்ல தீர்த்தத்தை, கோயிலுக்குப் பக்கங்களில் ஸேவார்த்திகளுக்கு உபயோகப்படும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வர்ஷாவர்ஷம் தகுந்த இஞ்சினீயர்கள், ஸ்ரீமதழகியசிங்கர் நியமனத்தினால் மேற்படி இடங்களுக்குச் சென்று குழாய்களை சுத்தம் செய்து வருகின்றனர்.

தத்காலம் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் 43-வது பட்டம் ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தின்பேரில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கோவிலின் ப்ராகாரத்திலேயே ஸுமார் ரூ. 5000 செலவில் ஒரு நிரந்தரமான அகன்ற கிணறு வெட்டப்பட்டுள்ளது.

கோயிலின் முன்புறத்து மண்டபங்கள், ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதி மதில்சுவர்கள் இவைகளை எல்லாம் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் ஸமீபத்தில் ரிப்பேர் செய்யப்பட்டும், புதிதாகக்கட்டப்பட்டுமிருக்கின்றன.

மேல் அஹோபிலத்தில் உள்ள ஸ்ரீமாலோலன் ஸந்நிதி ஸமீபத்தில் ரிப்பேர் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் மேல் அஹோபில க்ஷேத்திரத்தில் உள்ள மண்டபங்களும் ரிப்பேர் செய்யப்பட்டன. இவ்விதம் மொத்தம் ஸுமார் லக்ஷம் ரூபாய் வரை ஸமீபமாக ஐந்தாறு வருஷத்துக்குள் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் ப்ரதிவர்ஷமும் நடந்துவரும் ப்ரஹ்மோத்ஸவத்துக்கு சென்னையிலிருந்தே புஷ்பங்களும், தேவையான இதர ஸாமக்ரிகளும் வரவழைக்கப்படுகின்றன. அர்ச்சகர்களும் அத்யாபகர்களும் ஸ்ரீஸந்நிதியிலிருந்து செல்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய ஸகல வித ஸௌகர்யங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

சுகாதார வசதிக்கென்று, அதற்கேற்பட்ட இலாகாவுக்கு உரிய கட்டணங்கள் கொடுக்கப்பட்டு, கவனம் செலுத்தப்படுகிறது. பந்தோ

பஸ்து வசதிகளும் செய்யப்படுகின்றன. இதற்கென்றெல்லாம் ஸ்ரீஸந்நிதியில் (ஸ்ரீ அஹோபில மடத்தில்) செலவு செய்கிறார்கள்.

வண்டிகள் செல்ல முடியாததும், மனுஷ்யர்கள் நடந்தே செல்லக்கூடியதுமான இடங்களெல்லாம் ரிப்பேர் செய்யப்பட்டிருக்கிறது என்றால் எவ்வளவு செலவும், ச்ரமமும் ஏற்பட்டிருக்கும் என்று அநுபவித்தவர்கள் தான் உணரமுடியும். மேல் அஹோபிலத்திலும், அதற்குச் செல்லும் மார்க்கங்களிலும் ஏராளமான மண்டபங்களும், கட்டடங்களும் காணப்படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரசாண்ட விஜயநகர அரசர்களின், பெருமுயற்சியினால் பற்பலவித அழகிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. விஜயநகர ராஜ்ய தலைநகராகிய ஹம்பியை பழுது பார்க்கமுடியாது போலவே, இந்த அழகிய பெரிய மண்டபங்களையும், தடாகங்களையும் முன்போலவே அமைப்பதென்பது இயலாத கார்யம். இவ்வுண்மைசளை அறியமுடியாத பலர், இவைகளைப் பார்த்தவுடன், ஜீர்ணோத்தாரணம் செய்வதற்கு யாரும் முயற்சிக்கவில்லை என்று அவஸரமாகப் புகார் செய்துவிடுகின்றனர். ஸ்ரீரங்கத்தின் முகத் தோற்றத்தில் உள்ள ராயகோபுரத்தைப் பூர்த்தி செய்யமுடியுமா? வடக்குப்புறத்து கோபுரத்துக்காக, தென் திருக்காவேரி மார்க்கத்தில் நாட்டப்பட்டிருக்கும் தூண்களைக் கொண்டு கோபுரங்கள் அமைக்க முடியுமா? இவைகளைக் கண்டு ஸ்ரீரங்கக்ஷேத்ரம் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறமுடியுமா?

முற்காலத்தில் அரசாண்ட இந்து அரசர்கள் பற்பல கோயில்களைக் கட்டினார்கள். உயர்ந்த கலைச்செல்வங்களாக இந்த ஆலயங்கள் விளங்குகின்றன. ஆனால் காலப்போக்கில் கவனிப்பார் இல்லாமல் பலவிடங்கள் பாழாகி வருகின்றன. நவீன அரசாங்கமோ, கலைஞர்களோ இவைகளை முன்போல அமைப்பதென்பது நடக்கக்கூடிய கார்யமில்லை. கூடியவரை அதிகமாகச் சேதப்படாத இடங்களைக் காப்பாற்றமுடியும். இதையேதான் ஸ்ரீமதழகியசிங்கர்கள் தகுந்த அதிகாரிகளைக்கொண்டு ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

கர்நூல் ஜில்லாவின் மத்தியில் ஒரு காட்டு ப்ரதேசத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில், உத்ஸவ காலங்களில் கூடியவரை ஆஹார ஸௌகர்யங்களைக்கூட ஸ்ரீஸந்நிதியின் அதிகாரிகள், ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தின் பேரில் செய்துவருகிறார்கள். இம்மாதிரியான ஸௌகர்யம் ஒரு பரிமித அளவில்தான் ஸ்ரீஸந்நிதியால் செய்துவைக்க முடியும். லக்ஷக்கணக்கில் வரும் ஸேவார்த்திகள் யாவருக்கும் நிர்வாஹத்தி லுள்ளவர்கள் இம்மாதிரி ஸௌகர்யத்தைச் செய்துவைக்கவேண்டும் என்று நினைப்பது, எவ்வளவு மடமை என்பதை அநுபவசாலிகள் உணர்வர். எந்த ஆலயத்தில் இம்மாதிரி ஸௌகர்யம் செய்துவைக்கப்படுகிறது. எந்த பொதுஸ்தலத்தில் செய்யப்படுகிறது என்றுகூடக் கேட்கலாம்.

அர்லகட்டா என்ற இடத்திலிருந்து கீழ் அஹோபிலத்துக்குச் செல்ல ஸாதாரண வண்டிப்பாதை அமைந்திருக்கிறது. கீழ் அஹோபிலத்திலிருந்து மேல் அஹோபிலத்திற்குச் செல்லும் மார்க்கத்தில், பலவிடங்களில் மலை அருவிகளும், பவநாசினியும் ப்ரவஹிப்பதாலும், மலையின் ஏற்றச்சரிவினாலும், மார்க்கம் நவீன ஸாதனங்களுடனும், நவீன முறைப்படியும் அமைந்திருக்கவில்லை. இதைச்செய்ய போதிய வசதி தேவஸ்தானத்திலோ, ஸ்ரீஸந்நிதியிலோ கிடையாது.

தாஜ்மஹாலை ரிப்பேர் செய்யவும், ஸோமநாத் புனருத்தாரணம் செய்யவும் முன்வரும் உயர்ந்த அதிகாரிகள், இம்மாதிரி புராதன, புனித ஆலயங்களின் புனருத்தாரணங்களிலோ, அவைகளுக்கு ஏற்பட்ட மார்க்கங்களைச் செப்பனிடுவதிலோ, முயற்சி எடுத்துக் கொள்ள முன் வருவதில்லையே.

ஸம்பந்தப்பட்ட அறநிலைய அதிகாரிகளிடமும், ராஜ்யமந்திரிகளிடமும் கூட இது விஷயங்களை, ஸ்ரீஸந்நிதி அதிகாரிகள், பல ஸந்தர்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். மிகவும் ப்ரஸித்தமமைந்துள்ள திருப்பதி க்ஷேத்

210741

ரத்தில் குறித்த காலத்தில்தான் ஸாமான்யப்பட்டவர்கள் பகவத்தர்சனம் செய்யமுடிகிறது. கற்பூர ஹாரத்திக்கோ, உபஹார ஸமர்ப்பணத்திற்கோ கட்டணங்கள் எக்காலமும் விதிக்கப்படுகிறது, பூலோகவைகுண்டம் எனக்கூறப்படும், ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் அத்யயனோத்ஸவ காலங்களில் பலவித கட்டணங்கள் கொடுத்தே முக்யமான ஸமயங்களில் பகவத்தர்சனம் செய்யமுடிகிறது. ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்திலோ, ப்ரஹ்மோத்ஸவ ஸமயத்தில் மாத்திரம் ஸ்வல்ப கட்டணம் கொடுத்து கற்பூர ஹாரத்தியும், அர்ச்சனையும் செய்யவேணும். ஆனால் பகவத்தர்சனத்துக்கு யாதொரு கட்டணமும் எக்காலமும் இடையாது. திருவாராதன காலங்களும், ஏகாந்தஸமயங்களும் நீங்கலாக இதர காலங்களில் யாதொருவித கட்டணமுமின்றிக்கே பகவத்தர்சனம் செய்யமுடிகிறது.

திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திருமலைக்கு சேஷாத்ரி என்ற பெயர். இதன் தொடர்ச்சியாகிய மலைதான் கருடாத்ரி. இதில்தான் ஸ்ரீந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறான். திருமலையைக்காட்டிலும் அழகியதான பற்பல மண்டபங்களையும், தடாகங்களையும் பெற்றிருக்கிறது இந்த க்ஷேத்ரம். இவைகளை நன்கு நோக்குங்கால் ஒருகாலத்தில், திருமலையைக்காட்டிலும் ப்ரஸித்தமான க்ஷேத்ரமாக இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கமுடிகிறது. திருமலையின் ஸ்தல புராணத்திலிருந்தும் கூட, ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் வாசஸ்தலத்தை அப்பேர்பட்டதாகக் கருதமுடியும்.

காலக்ரௌர்யத்தினால் இந்த க்ஷேத்ரம் புறக்கணிக்கப்பட்டு, பல கட்டடங்கள் பழுதடைந்திருக்கின்றன. இப்பொழுதுகூட இந்த க்ஷேத்ரத்தை, திருமலைக்கு ஒப்பாக மறுபடியும் விளங்கும்படி செய்யவேண்டும் என்ற திருவுள்ளத்துடன், தத்காலம் ஸ்ரீ அஹோபில மடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ அழகியசிங்கர் அரும்பாடுபட்டுவருவது, அதில் ஸம்பந்தப்பட்டவர்களுக்குத் தான் தெரியும். இந்தஸந்தர்ப்பத்தில் விஷயந்தெரியாதவர்கள், பொறுப்பற்றமுறையில் புகார் கூறிவருவதைக் கண்டு நாம் அவர்களின் போக்கைக் கண்டு வருந்தவேண்டி வருகிறது. உலகத்தோர்க்கு உண்மையை விளக்கவே இவ்வளவுதூரம் எழுதவேண்டிவந்தது.

ஸ்ரீ மாலோல முத்ராலயத்தில்

கல்யாண பத்ரிகைகள், லெடர் ஹேட்டுகள், ரசீது புத்தகங்கள் மற்றும் தேவையான அச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில் தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துசெய்து கொடுக்கப்படும். மதஸ்தாபனங்களுடைய வேலைகளுக்கும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை வெளியிடுவோர்களுக்கும் தகுந்த சலுகை காட்டப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர், ஸ்ரீ மாலோல முத்ராலயம்,
30, பனகல் தெரு, திருவுள்ளூர்.

ஸ்ரீ:

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன்
(37-வது பட்டம்) அருளிச்செய்த

ஸ்ரீமச் சாரீரக ஸுப்ரபாதம்

हे देवाधिप हे दयेश्वरविभो वेधोऽश्वमेधावधे
हे योगीन्द्र शठारिमोहनतनो गोपालरक्षामनो ।
काञ्चीपूर्णमनोऽमृतायितवचो मोचारसापूरित-
श्रीरामानुजसूक्तिदुग्धजलधेरुत्तिष्ठ सुष्टूदितम् ॥

ஹே தேவாதிப ஹே தயேச்வரவிபோ வேதோச்வமேதாவதே
ஹே யோகீந்த்ர சடாரிமோஹநதநோ கோபாலரக்ஷாமநோ ।
காஞ்சீபூர்ணமநோऽம்ருதாயிதவசோ மோசாரஸாபூரித
ஸ்ரீராமாநுஜஸூக்திதுக்தஜலதேருத்திஷ்ட ஸுஷ்டூதிதம் ॥

(பதவுரை) ஹே தேவாதிப- ஏ விண்ணோர் தலைவனே! ஹே தயா-ஈச்வர- கருணா ரூபிணியான பெரியபிராட்டிக்கு நாயகனே! ஹே விபோ- எங்கும் நிறைந்தவனே! வேதோ அச்வமேத அவதே - நான்முகன் செய்த அச்வமேதவேள்வியின் எல்லையாயிருப்பவனே! ஹே யோகீந்த்ரசடாரி மோஹநதநோ- யோகிச்ரேஷ்டரான நம்மாழ்வாருக்கு மோஹத்தை யுண்டாக்கும் திவ்யமங்களவிக்ரஹமுடையவனே! கோபாலரக்ஷாமநோ- கோபாலர்களை ரக்ஷிக்கும் மந்த்ரமாயிருப்பவனே! காஞ்சீபூர்ணமநோ அம்ருதாயித வச: - திருக்கச்சிநம்பியின் திருவுள்ளத்துக்கு அமுதமாயுள்ள திருவாக்கையுடையவனே! மோசா ரஸ ஆபூரித-வாழைப் பழத்தின் ரஸம் நிறைந்த, ஸ்ரீராமாநுஜ- ஸ்ரீபகவத்பாஷ்யகாரருடைய, ஸூக்தி- திவ்ய ஸூக்திகளாகிற, துக்தஜலதே:- பாற்கடலினின்றும், உத்திஷ்ட - திருப்பள்ளியெழுந்தருளவேண்டும். ஸுஷ்டு உதிதம்- நன்கு விடிந்தது.

கோபாலரக்ஷாமநோ - 'கோபாலாசார்யர்' என்று, இக்கிரந்தம் அருளிச்செய்த ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரமத் திருநாமம். கோபாலன் என்ற தம்மைக்காக்கும் மந்த்ர ஸ்வரூபியாயிருக்கிறான் பேரருளாளன் என்று அநுஸந்திக்கிறார் என்றும் சொல்லலாம்.

யோகீந்த்ரசடாரிமோஹநதநோ - இங்கு 'यस्यानुभावमधिगन्तुमशक्नुवन्तो मुह्यन्त्यभङ्गुर धियो मुनिसार्वभौमाः' என்ற வரதராஜபஞ்சாசத் ச்லோகம் அநுஸந்திக்கத்தக்கது.

காஞ்சீபூர்ணமநோऽம்ருதாயிதவச: - பேரருளாளன் அர்ச்சாஸமாதியைக் கடந்து ஸ்ரீ திருக்கச்சிநம்பிகளுடன் ஸல்லாபம் செய்தருளினான் என்பதைக் குறிக்கிறது. பின்பு நம்பியும் கச்சிவாய்த்தான் திருமண்டபத்தில் எழுந்தருளியிருக்கிற பேரருளாளன் ஸன்னிதியில் இளையாழ்வார் விண்ணப்பத்தை ஒருகால் விண்ணப்பம் செய்ய, பேரருளாளனும், 'ஸ்ரீமானான நானே பரதத்துவம், நம்முடைய மதம் பேதம், ப்ரபத்தியே உபாயம், அந்திம ஸ்ம்ருதி ஆவச்யகமன்று, சரீராவஸாநத்தில் மோக்ஷம், பெரியநம்பி திருவடிகளில் ஆச்ரயிப்பது' என்று ஆறு வார்த்தை யருளிச்செய்ய........' என்று குருபரம்பராப்ரபாவத்தில் சொல்லியபடியை இங்கு நினைக்கவும்.

மோசா.........துக்தஜலதே:— ஸ்ரீபாஷ்யகாரரின் திவ்யஸூக்திகள், தேன்வாழையின் ரஸம் நிறைந்த பாற்கடலைப்போல் இனிமையாயுள்ளன. இந்த ஸூக்திகளில் எம்பெருமான் ஸுகமாகக் கண்வளர்ந்தருளுகிறான். வேத வேதாந்தங்களில் சொல்லிய எம்பெருமானின் ஸ்வரூப ஸ்வபாவங்களை யுள்ளபடியே ஸ்ரீபாஷ்யகாரரின் திவ்யஸூக்திகள் ப்ரதிபாதிக்கிறபடியால் இவைகளில் கண்வளர்ந்தருளுகிறான் என்கிறது. இங்கு 'दुरितरहितजिह्वा दुग्धकुल्या सकुल्या' 'सुधासन्दोहाब्धिः' என்பவை அநுஸந்தேயங்கள்.

हस्त्यद्रीश त्वयेदं जगदखिलमभूत्सत्पुरा येन भूयो
भूयस्स्यामित्यवेक्ष्य प्रचुरमिदमभूर्यस्त्वमात्माखिलस्य ।
तादृक्षत्वद्धियेदं सकलमिह यथा मृद्धिया मृन्मयं स्यात्
विज्ञातं हीति वेदे सुखशयित! समुत्तिष्ठ सुष्ठु प्रभातम् ॥

ஹஸ்த்யத்ரீச த்வயேதம் ஜகதகிலமபூத் ஸத் புரா யேந பூயோ
பூய: ஸ்யாமித்யவேக்ஷ்ய ப்ரசுரமிதமபூர்யஸ்த்வமாத்மாகிலஸ்ய ।
தாத்ருக்ஷத்வத்தியேதம் ஸகலமிஹ யதா ம்ருத்தியா ம்ருந்மயம் ஸ்யாத்
விஜ்ஞாதம் ஹீதி வேதே ஸுகசயித! ஸமுத்திஷ்ட ஸுஷ்டு ப்ரபாதம்

(ப-ரை) ஹே ஹஸ்தி அத்ரீச— நாகமலை நாயகனே! புரா— முன்பு, (ப்ரளயகாலத்தில்) இதம் அகிலம் ஜகத் — இந்த உலகமெல்லாம், யேந த்வயா — எந்த உன்னால், ஸத் அபூத்— ஸத் என்று சொல்லப்பட்டதாக ஆயிற்றோ, ய: த்வம்— யாதொரு நீ, பூய:— மறுபடியும், பூய: ஸ்யாம் — பஹுவாக ஆகக்கடவேன், இதி அவேக்ஷ்ய — என்று ஸங்கல்பித்து, இதம் ப்ரசுரம் அபூ:— பஹுவான உலகமாக ஆனாயோ, (யாதொரு நீ) அகிலஸ்ய ஆத்மா— எல்லாவுலகத்துக்கும் ஆத்மாவாக இருக்கிறாயோ, யதா— எப்படி, இஹ— இவ்வுலகில், ம்ருத்தியா — ம்ருத்தை (மண்ணை) யறிந்ததனால், ஸகலம் ம்ருந்மயம் — ம்ருத்விகாரமான ஸகல பதார்த்தங்களும், விஜ்ஞாதம் ஸ்யாத்— அறியப்பட்டதாக ஆகிறதோ, (அவ்விதமே) தாத்ருக்ஷத்வத்தியா— அப்படிப்பட்ட உன்னை அறிந்ததினால், இதம் ஸகலம் விஜ்ஞாதம் ஸ்யாத் ஹி— அறியப்பட்டதாக ஆகுமன்றோ, இதி — என்று கூறும், வேதே — வேதத்தில் ஸுகசயித — ஸுகமாகக் கண்வளர்ந்தருளுமவனே! ஸுஷ்டு ப்ரபாதம் — நன்றாகப் பொழுது விடிந்தது, ஸமுத்திஷ்ட— திருப்பள்ளியெழுந்தருளவேண்டும்.

ஸ்ரீசாரீரக மீமாம்ஸையின் முதல் அத்யாயத்தில் சாஸ்த்ராரம்ப பேடிகைக்குமேல் உள்ள30 அதிகரணங்களுக்கு விஷயங்களான உபநிஷத்வாக்யங்களில் திருக்கண்வளர்ந்தருளும் ஸ்ரீதேவாதிராஜனைத் திருப்பள்ளியுணர்ந்தருளும்படி ப்ரார்த்திப்பதாயிருக்கும் இக்கிரந்தம்.

இதற்கு 60 வருஷத்துக்கு முன்புள்ள ஹேமலம்பி வருஷத்தில் மார்கழி மாஸத்தில் திருப்பாவைபோல் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு ச்லோகமாயிருக்கும்படி அருளிச்செய்ததாயிருக்கும். இவ்விஷயத்தை இக்கிரந்த கர்த்தாவான ஸ்ரீஅழகியசிங்கரே 'हेमलम्बिन्यब्देऽस्मिन् चापमासे दिनगणगणिताः' என்று மேல் 31-வது ச்லோகத்தி லருளிச்செய்திருக்கிறார்.

இந்த ச்லோகத்தில் ஈக்ஷத்யதிகரணத்துக்கு விஷயவாக்யமான சாந்தோக்யம் ஆறுவது அத்யாயமான ஸத்வித்யாப்ரதிபாதகமான வேதபாகத்தில் கண்வளர்ந்தருளுமவனைத் திருக்கண் உணர்ந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஏ நாகமலைநாயகனே! இவ்வுலகமெல்லாம் ஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரளயகாலத்தில் ஸத் என்ற ஒரே வஸ்துவாயிருந்தது. இப்படிச்செய்தது நீர்தான். பிறகு 'நான் பலவகைப் பட்ட வஸ்துக்கள் நிறைந்த உலகமாக ஆகப்போகிறேன்' என்று ஸங்கல்பித்து அப்படியே பல பொருள்களுள்ள உலகமாக ஆனீர். இவ்வுலகத்துக்கு நீர் ஆத்மா. (உள்புகுந்து நியமிக்கிறவர்.)ஒரு மண்கட்டியை யறிந்தால், அதனு லுண்டுபண்ணப்பட்ட குடம் முதலியவைகளை யறிந்ததாக ஆவதை இவ்வுலகில் நாம் பார்க்கிறோம். அவ்விதமே அகிலஜகத்காரணமாய் ஆத்மாவாயிருந்துள்ள உம்மை யறிந்தால், உம்மால் உண்டுபண்ணப்பட்ட எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகும் என்று சொல்லுகிற ஸத்வித்யையைச் சொல்லும் சாந்தோக்ய வேதபாகத்தில் திருக்கண்வளர்பவனைப் பள்ளியுணர்த்தினபடி.

இங்கு (1) 'सदेव सोम्य इदमग्र आसीत्, (2) तदैक्षत बहु स्यां प्रजायेय, (3) ऐतदात्म्यमिदं सर्वं तत्सत्यम् । स आत्मा तत्वमसि, तमादेशमप्राक्ष्यः येनाश्रुतं श्रुतं भवति अमतं मतमविज्ञातं विज्ञातमिति, (5) यथा सोम्य एकेन मृत्पिण्डेन सर्वं मृन्मयं विज्ञातं स्यात्' என்கிற ஸத்வித்யா வாக்யங்கள் அநுஸந்தேயங்கள். இந்த வாக்யங்களின் பொருள் வருமாறு:—

(1) இதம்— பஹுவாய் நாமரூபங்களைப் பிரித்து அறியக்கூடியதாய் இருக்கும் இவ்வுலகம், அக்ரே- ஸ்ருஷ்டிக்கு முன்பு, ஏகம் ஏவ— பிரித்து அறியமுடியாத நாமரூபங்களையுடைய ஒன்று என்று சொல்லலாம்படியான அவஸ்தையை யுடையதாகவே, அத்விதீயம்— வேறு அதிஷ்டாதா இல்லாமல், ஸத் ஏவ ஆஸீத்— ஸத் என்று சொல்லும்படியான வஸ்துவாகவே இருந்தது. (ஸத் என்பது பரமாத்மா)

(2) தத் - அந்த ஸத் சப்தத்தால் சொல்லப்பட்ட பரமாத்மா, பஹு ஸ்யாம் - சேதநாசேதநமிச்ரமான உலகமாக நானே ஆகக்கடவேன், அதற்காக, ப்ரஜாயேய- தேஜஸ், ஜலம், ப்ருத்வி என்ற ஸமஷ்டிரூபமாக ஆகக்கடவேன், இதி— என்று, ஐக்ஷத— ஸங்கல்பித்தது.

(3) இதம் ஸர்வம்—ஜீவனுடன்கூடிய எல்லா ஜகத்தும், ஐததாத்ம்யம்— கீழ் கூறிய ஸத் என்னப்பட்ட ப்ரஹ்மத்தை ஆத்மாவாகவுடையது, தத் ஸத்யம்— ப்ரபஞ்சமானது இந்த ப்ரஹ்மத்தை ஆத்மாவாகவுடையதென்பது ப்ராமாணிகம். ஸ:— அந்த ஸத் சப்தத்தால் சொல்லப்பட்டவன் ஆத்மா; ச்வேதகேதோ— ஓ ச்வேதகேதுவே! தத்— ஸத் என்று கூறப்பட்ட ப்ரஹ்மமாக, த்வம் அஸி— நீயிருக்கிறாய். அதாவது:— ஸர்வஜ்ஞமாகவும், ஸத்யஸங்கல்பமாகவும்,ஜகத்காரணமுமாகச்சொல்லப்பட்ட ப்ரஹ்மமே உனக்கு ஆத்மாவாயிருக்கிறது.

(4) தம்— அந்த, ஆதேசம் — ஆதேஷ்டாவான (நியந்தாவான) பரமாத்மாவை, அப்ராக்ஷ்ய:- உபதேசிக்கும்படி கேட்டாயா? யேந— எந்த ஆத்மாவைக் கேட்டதால், அச்ருதம்— கேட்கப்படாதவை யெல்லாம், ச்ருதம் பவதி— கேட்கப்பட்டதாக ஆகுமோ, (எதை

சிந்தித்தால்) அமதம் மதம்— சிந்திக்கப்படாதவையெல்லாம் சிந்திக்கப்பட்டதாக ஆகுமோ, அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் — தியானிக்கப்படாதது தியானிக்கப்பட்டதாகுமோ. (இவ்வுலகத்துக்கு உபாதாநகாரணமான அந்த ஆத்மாவைக் கேட்டாயா? என்று திரண்டபொருள்)

(5) ஸோம்ய— ஸோமபாநம் பண்ணத்தக்கவனே! யதா — எப்படி, ஏகேந ம்ருத்பிண்டேந— உபாதாநகாரணமான ஒரு ம்ருத்பிண்டத்தை யறிந்ததினுல், ஸர்வம் ம்ருந்மயம்— அம்மண்ணின் விகாரமான குடம் வாணுய் முதலிய எல்லாம், விஜ்ஞாதம் ஸ்யாத்— அறிந்ததாக ஆகுமோ. (அவ்விதமே உலகத்துக்கு உபாதாநகாரணமான நியந்தாவான ஆத்மாவை யறிந்தால், அவனுல் உண்டுபண்ணப்பட்ட எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகும்.)

இந்த ஈக்ஷதி அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தின் சுருக்கம்:— 'ஸதேவ ஸோம்யேதம் அக்ர ஆஸீத்' என்ற ஜகத்காரணுவஸ்தையை ப்ரதிபாதிக்கிற வாக்யத்தில் 'ஸத்' என்று சொல்லப்பட்ட வஸ்து ப்ரதாநம் என்ற ஸத்வ ரஜஸ் தமோமயமான த்ரவ்யம் தான். முக்குண உருவான ஜகத்துக்கு முக்குண உருவான ப்ரதாநமே உபாதாந காரணமாக இருக்க வேண்டும். ஏகவிஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞாநம் என்ற ப்ரதிஜ்ஞையும், த்ருஷ்டாந்தமும் சொல்லியிருப்பதால் இந்த வாக்யம் அநுமானுகாரம் என்று தோன்றுகிறது. ஸாங்கியர்கள் ப்ரதாநத்தை அநுமானத்தால் ஸாதிக்கிருர்கள். அவர்கள் சொல்லும் ஆநுமானிகமான ப்ரதானமே 'ஸத்' என்று சொல்லப்படுகிறது. அதுவே ஜகத்காரணம். (ஸாங்கியர்கள் பூர்வபக்ஷிகள்)

ஸித்தாந்தஸங்க்ரஹம்:— ஸத் என்பதால் சொல்லப்பட்டது ப்ரதானமன்று, பரப்ரஹ்மம் தான். ஏனெனில், 'தத் ஐக்ஷத' (அது ஸங்கல்பித்தது) என்று ஸங்கல்பம் சொல்லியிருப்பதால் ஸங்கல்பம் அசேதநமான ப்ரதானத்துக்குக் கூடாது. இந்த ஈக்ஷணத்தை கௌணம் என்று சொல்லமுடியாது. ஸத் என்பதை மேல் 'ஸ ஆத்மா' என்று சொல்லியிருக்கிறது. இந்த ஸத் என்பதை உபாஸிக்கிறவனுக்கு மோக்ஷம் வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. ப்ரதானத்தின் உபாஸநம் மோக்ஷவிரோதியென்றே ஸாங்கியர்களும் சொல்லுகிருர்கள். ஸத் என்பது ப்ரதானமாயிருந்தால் அது ஹேயம் என்று சொல்லியிருக்கவேண்டும். அப்படி இங்கு கூறவில்லை. மேலும் ஒன்றை யறிந்தால் எல்லாம் அறிந்ததாகும் என்ற ப்ரதிஜ்ஞைக்கு விரோதமும் வரும். சேதநன் ப்ரதானத்தின் கார்யமல்லணுகையால் அசேதந ப்ரதானத்தை யறிந்தால் அவனை யறியமுடியாது. சேதநாசேதநங்களை சரீரமாகவுடைய ப்ரஹ்மத்தை யறிந்தால், (கார்யமும் காரணமுமான ப்ரஹ்மஞானத்தால்) எல்லாம் அறிந்ததாக ஆகும். ஆக ப்ரதிஜ்ஞைக்கு விரோதம் வாராமலிருப்பதற்காக 'ஸத்' என்பது ப்ரதானமன்று, ப்ரஹ்மம் தான். பூர்வபக்ஷி சொன்னபடி ப்ரதிஜ்ஞை, த்ருஷ்டாந்தம் என்ற இரண்டு அவயவங்கள் கூறியதால் மட்டில் அநுமானுகாரம் இவ்வாக்யம் என்று கூறமுடியாது. முக்யமான ஹேது என்கிற அவயவம் இங்கு கூறப்படவில்லை. ஆதலால் அநுமானுகாரமன்று இவ்வாக்யம், ஆதலால் ஈக்ஷணம் சொல்லியிருப்பதால் ஸத் என்பது ப்ரஹ்மம்தான் என்று நிச்சயிக்கப்பட்டது.

(தொடரும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வைகாசி மாதம் 31௳ ராத்ரி புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள கதோலி என்னுமிடத்திற்கு எழுந்தருளினார். ஆனி மாதம் 1௳ ராத்ரி புறப்பட்டு முஸபர்நகர் எழுந்தருளினார். அவ்விடம் டெல்லியிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யங்கார் முதலியவர்கள் வந்து பெருமாளையும் ஸ்ரீ அகியசிங்கரையும் ஸேவித்துவிட்டு சீக்கிரம் டில்லிக்கு எழுந்தருளவேணுமென்று பிரார்த்தித்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள பிர்லா எழுந்தருளினார். அங்கு டில்லியிலிருந்து வித்வான் காளி ஸ்ரீ ரங்காசாரியர் ஸ்ரீ கே. எஸ். க்ருஷ்ணன், ஸ்ரீ வெங்கடசுப்பதீக்ஷிதர் முதலியவர்கள் பெருமாளை ஸேவித்துவிட்டு டில்லிக்கு அவசியம் எழுந்தருளவேணுமென்று பிரார்த்தித்துவிட்டுப் போனார்கள்.

அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள மல்ரோல் எழுந்தருளினார். ஆனி௴ 3௳ ராத்ரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ஜமோரி எழுந்தருளினார். அன்று ராத்திரி புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள ஹரித்வாரம் எழுந்தருளினார். மதராஸ் தர்மசாலையிலெழுந்தருளியிருந்தார். அன்று பெரிய பெருமாளுக்கு கங்கை தீர்த்தத்தால் திருமஞ்ஜனம் நடந்தது. அன்று ராத்ரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ஹ்ருஷீகேசமெழுந்தருளினார். ஹ்ருஷீகேசத்தில் ஆந்த்ராச்ரமத்தில் எழுந்தருளியிருந்தார். அன்று அங்கிருந்து பத்ரிகாச்ரமம் எழுந்தருளுவதைப் பற்றிப் பலவிதமாக விசாரங்கள் கிளம்பி அன்று முடிவில் போக ஸௌகர்யமில்லையென்றே தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மறுநாள் மாலை மறுபடியும் இதைப் பற்றி திருவுள்ளத்தில் பட்டு முதல் நாள் ஏற்பட்ட அஸௌகர்யங்களுக்கு ஏதாவது பரிஹாரம் பண்ணிக்கொண்டு ச்ரமாதிகளை ஸஹித்துக்கொண்டு போகலாமென்கிற விஷயத்தை கைங்கர்யபரர்களிடம் ஸாதிக்கும்போது பகவத்ஸங்கல்பத்தால் அவர்களுக்கும் ஒருவாறு போவதில் உத்ஸாஹம் ஜனித்தபடியால் போகலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

பத்ரிகாச்ரமத்தில் ஸன்னிதிபரம்பரை சிஷ்யர்களான 41-வது பட்டம் வரையில் ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய அபிமானம் பெற்றவரான பண்டா நரஹரிசாஸ்த்ரி, தனது குமாரன் அட்வகேட் ரகுநாத் பிரஸாதை அனுப்பித்து வேண்டிய ஸௌகர்யங்களையும் செய்து பத்ரிகாச்ரமம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் சீக்கிரம் ஹ்ருஷீகேசத்தில் திரும்பக் கொண்டுவிடுவதாக ப்ரார்த்திக்கும்படி சொல்லியனுப்பியிருந்தபடி அவர் நேரில் வந்து ப்ரார்த்தித்ததால் அவருடைய ப்ரார்த்தனையை யங்கீகரித்து அன்று ராத்ரி புறப்பட்டு தெண்டிகையில் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு கைங்கர்யபரர்களுடன் தாமும் தண்டிகையில் பத்ரி எழுந்தருளியாயிற்று.

ஹ்ருஷீகேசத்திலிருந்து பிப்பல்கோடிவரையில் பஸ் செல்லுகிறது. ஆனால் பஸ் செல்லும் வழியில் சட்டி என்று சொல்லப்படும் சத்திரங்கள் இல்லை. பஸ் மார்க்கமும் நடைமார்க்கமும் சில இடங்களில் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஹ்ருஷீகேசத்திலிருந்து தேவப்ரயாகைவரையில் இரண்டு மார்க்கமும் தனித்தனியாகவே இருக்கிறது. கால்நடைமார்க்கத்தில் ஆனி௴ 7ந்தேதி வெள்ளிக்கிழமை ராத்ரி புறப்பட்டு 5 மைல் தூரமுள்ள செருடசட்டி எழுந்தருளினார். ஆனி௴ 8௳ மத்யாஹ்னம் புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள மோஹசட்டி எழுந்தருளினார். விடியற்காலையிலே புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள பந்தர்சட்டி எழுந்தருளினார். ஸாயங்காலம் ஆராதனம் ஆனபிறகு இரவு 9 மணிக்குப் புறப்பட்டு மஹாதேவசட்டி எழுந்தருளினார். ஆனி௴ 10௳ பிம்மாலை புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள வியாஸகாட் எழுந்தருளினார். அன்று ஸாயங்காலம் புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள தேவப்ரயாகை எழுந்தருளினார். இங்கிருந்து பெரு

மாளுக்கு இன்னும் ஒரு தண்டிகை அமர்த்திக் கொண்டு எழுந்தருளியாயிற்று. கண்டமென்னும் கடிநகர் எம்பெருமான் புருஷோத்தமனை 'தங்கையைமூக்கும்' என்கிற பெரியாழ்வார் திருமொழி பாசுர ஸேவை சாற்றுமுறையுடன் மங்களாசாஸனம் செய்துவிட்டு எழுந்தருளியாயிற்று.

ஆனிமீ 11வ பிம்மாலே அங்கிருந்து புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள ராம்பூர் எழுந்தருளினர். அன்று ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு ஸ்ரீநகர் வழியாக 18 மைல் தூரமுள்ள பட்டிசாரா எழுந்தருளினர். ஸாயங்காலம் புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள குலாப்ராய் எழுந்தருளினர். ஆனிமீ 14வ காலே குலாப்ராயிலிருந்து புறப்பட்டு 10மைல் தூரமுள்ள சிவாநந்திக்கு ருத்ரப்பயாகை வழியாக எழுந்தருளினர். அங்கிருந்து மத்தியானம் புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள கர்ணப்ரயாகை எழுந்தருளியாயிற்று. ஆனிமீ 15வ பிம்மாலே புறப்பட்டு 13மைல் தூரமுள்ள நந்தப்ரயாகை எழுந்தருளினர். மத்தியாஹ்னம் புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள மட்சட்டி எழுந்தருளினர். ஆனிமீ 16வ பிம்மாலே புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள கருடகங்கை எழுந்தருளினர். மத்தியாஹ்னம் புறப்பட்டு அங்கிருந்து 9 மைல் தூரமுள்ள குமார்சட்டி எழுந்தருளினர். ஆனிமீ 17வ பிம்மாலே புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ஜோஷிமட் எருந்தருளினர். அன்று ஜோஷிமடத்திலுள்ள திருப்ராதி எம்பெருமானையும் 'வாலிமாவலத்து' என்கிற பெரிய திருமொழி பாசுரத்தால் மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. அன்று மத்யானம் புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள பாண்டுகேச்வரம் எழுந்தருளினர். ஆனிமீ 18வ பிம்மாலே புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள ஹனுமான்சட்டி எழுந்தருளினர். அன்று மத்யானம் புறப்பட்டு 5 மைல் தூரமுள்ள பதரிகாச்ரமம் எழுந்தருளினர். ஸன்னிதியிலிருந்து பூர்ணகும்பம் சத்ர சாமர மரியாதைகளுடன் ஸன்னிதி உத்யோகஸ்தர்களும், கைங்கர்யபரர்களும், நரஹரிசாஸ்த்ரி முதலிய பண்டாக்களுமெதிர்கொண்டழைத்து நேரே பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போனர்கள். பெருமாள் ஸன்னிதியிலுள்ள லக்ஷ்மி ஸன்னிதியில் பெருமாள் தண்டிகையை எழுந்தருளப்பண்ணிவிட்டு, பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு, நரஹரி சாஸ்த்ரியின் க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அன்று ராத்ரி மறுபடியும் பெருமாள் ஸன்னிதிக்கெழுந்தருளி 'முற்றமூத்து' 'எனமுனகி' என்கிற திருமொழிகளை அநுஸந்தித்து ஸேவை சாற்றுமுறைகளை செய்துவிட்டு எழுந்தருளினர். மறுநாளும் (ஆனிமீ 19வ) காலே திருமஞ்ஜனம் முதலியதுகளை ஸேவித்துவிட்டு அன்று மத்யாஹ்னம் அங்கிருந்து திரும்புகாலில் புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள காட் எழுந்தருளினர். ஆனிமீ 20வ காட்டிலிருந்து பிம்மாலே புறப்பட்டு 6மைல்தூரமுள்ள ஜோஷிமட் எழுந்தருளினர். மத்யானம் புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள குலாப்கோடி எழுந்தருளினர். 21வ பிம்மாலே அவ்விடமிருந்து புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள சியாஸேன் எழுந்தருளினர். அங்கிருந்து மத்யானம் புறப்பட்டு ஸ-னேலா எழுந்தருளினர். ஆனிமீ 22வ மத்யாஹ்னம் அவ்விடமிருந்து புறப்பட்டு நந்தப்ரயாகை வழியாக 11 மைல் தூரமுள்ள கர்ணப்ரயாகை எழுந்தருளினர். 23வ பிம்மாலே அவ்விடமிருந்து புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள சிவாநந்தி எழுந்தருளினர். அவ்விடமிருந்து மத்யாஹ்னம் புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள குலாப்ராய் எழுந்தருளினர். ஆனிமீ 24வ மத்யாஹ்னம் 11 மணிக்கு அவ்விடமிருந்து புறப்பட்டு 22மைல் தூரமுள்ள பில்வகேதாரி எழுந்தருளினர். 25வ செவ்வாய் பிம்மாலே அவ்விடமிருந்து புறப்பட்டு 16 மைல் தூரமுள்ள தேவப்ரயாகை எழுந்தருளினர். அவ்விடமிருந்து மத்யாஹ்னம் புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள வியாஸகாட் எழுந்தருளினர். ஆனிமீ 27வ பிம்மாலே அங்கிருந்து புறப்பட்டு 17 மைல் தூரம் உள்ள வியாஸி எழுந்தருளினர். திரும்பும்போது வியாஸியிலிருந்து பஸ் போகும் மார்க்கமே எழுந்தருளினர். அன்று ராத்ரி அங்

கிருந்து புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள சிவபுரி எழுந்தருளினர். 27உ வியாழக்கிழமை பிம்மலே அங்கிருந்து புறப்பட்டு 8 மணி ஸுமாருக்கு 10 மைல் தூரமுள்ள ஹ்ருஷீகேசமெழுந்தருளினர். அன்று 7-வது சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் ஆரம்பிக்கப்பட்டது. திருவுள்ளூர், புள்ளபூதங்குடி, ஆதனூர் கோயில் மரியாதைகள் வந்திருந்தன.

பதரிகாச்ரமத்திலிருந்து இவ்விடம் வரும்போது கர்ணப்ரயாகையில் பெரியயானைஹ்ருஷீகேசத்தில் பரமபதத்தை அடைந்ததாக ஸமாசாரம் வந்தது. ஹ்ருஷீகேசம் வந்தபிற்பாடு ஸந்நிதியின் ரிக்கார்டு, கணக்கு பத்ரிகைகளின் கார்யஸ்தராக இருந்தவரான ஸ்ரீநிவாஸாசாரியர்(உடம்பு அஸௌகர்யத்தினல் மதுரா ஆஸ்பத்திரியிலிருந்தவரும்) பரமபதித்துவிட்டார் என்ற ஸமாசாரம் தெரியவந்தது. பம்பாயில் ஏற்பட்ட பெரிய விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதும், அதில் ஏற்பட்ட புண்கள் நன்ருக ஆறிக்கொண்டு கூடவே ஸஞ்சாரத்தில் நெடுந்தூரம் வந்து ஹ்ருஷீகேசத்தில் 15 தினங்கள் தங்கியிருந்தபிற்பாடும் யானை காலமானதும் சுமார் 1 மாதம் ஆஸ்பத்திரியிலேயே இருந்து சௌகர்யமாய்க்கொண்டே வருவதாய்ச் சொன்ன ஸ்ரீநிவாஸாசாரியரும் காலமானதுபற்றி என்ன சொல்ல இருக்கிறது. எல்லாம் பகவத்ஸங்கல்பப்படி நடக்கும் என்று ஸாதித்துவிட்டு 'ப்ரதிகாரவிதாநமாயுஷ: ஸதி சேஷே ஹி பலாய கல்பதே' என்ற காளிதாஸன் ச்லோகத்தை ஸாதிக்கும்படியாயிருந்தது.

ஹ்ருஷீகேசத்தில் ஆந்திராச்ரமம் கங்கையின் ஸமீபத்தில் இருப்பதுடன் விசேஷ ஸௌகர்யங்களுடனும் அமைந்திருக்கிறது. உத்தானத்திலிருந்து குருக்ஷேத்ரம் டில்லி வழியாக காசி எழுந்தருளக்கூடும்.

(தொடரும்)

ஸ்ரீ:

-:ஸ்ரீமதழகியசிங்கரின் பத்ரீயாத்ரையும், ஹ்ருஷீகேசத்தில் ஸங்கல்பமஹோத்ஸவமும்:-

நமது ஸித்தாந்தத்தில் ச்ரிய:பதியான ஸர்வேச்வரன், ஸ்வஙியமனத்தினலேயே சேதனசேதனத்மகமான ப்ரபஞ்சங்களை நடத்திவருகிறன் என்பதுமுக்யமான அம்சமாகும். இது நமது பூர்வாசார்யர்களால் நமக்கு உபதேசிக்கப்பட்டதாகிறது. இது கொள்கையளவில் மாத்திரம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக நவீன காலத்தவரில் பலர் எண்ணலாம். ஆனல் கற்றறிந்தவர்கள் இவ்வுண்மையை நன்குணர்வர்.

நமது வாழ்க்கையில் இத்தத்துவத்தை பல ஸந்தர்ப்பங்களில் காணமுடிகிறது. எதிர்பாராத ஸம்பவங்கள் நமது வாழ்க்கையில் நடக்கின்றன. நமது யத்னத்தில் நடக்கமுடியாது என்று நினைக்கும் ஸம்பவங்கள் நடப்பதையும் நாம் பார்க்கிறோம். இவைகளின் காரணங்கள் என்ன என்று நாம் ஆராய்ந்து பார்த்தால், மேலே கூறப்பட்டுள்ள தத்துவத்தின் உண்மை புலனாகும்.

இத்தத்துவத்தின் அடிப்படையை நன்கு உணரவேண்டியதும் அவசியம். அதை உணராவிட்டால் இத்தத்துவத்தை விபரீதமாக அறிவதாக முடியும். அதாவது உலகிலுள்ள எக்கார்யத்திற்கும் நமக்கும் யாதொரு விதமான ஸம்பந்தமும் இல்லை என்றும், நாம் வாளாவிருப்பதே நமது பொறுப்பென்றும்; சோம்பேரித்தனத்துக்கு ஆஸ்பதமான ஒருவகை மனேநிலை ஏற்பட ஹேதுவாகலாம். உலகில் காணப்படும் பற்பல மாறுபாடுகளின் காரணமாக ச்ரிய:பதி பக்ஷபாதி என்று எண்ணவும் ஸந்தர்ப்பங்கள் இடங்கொடுக்கக்கூடும்.

ஆகவேதான் இத்தத்துவத்தின் உண்மையை உணர்வது மிகவும் அவசியம் என்று கூறினேம். இத்தத்துவத்தின் அடிப்படையைத்தான் பூர்வகர்மபலன் எனக் கூறுகிறார்கள். பூர்வகர்மபலத்தினல் எக்கார்யமும் நடைபெறுகிறது. இதற்கு அநுகுணமாகத்தான் நமது

ப்ரவ்ருத்திகளும் ஏற்படுகின்றன. இதை நடத்தித் தருபவன் தான் எம்பெருமான். ஆனால் நம்முடையது என்று ஒருவிதமான ப்ரயோஜனமும் கிடையாது. எம்பெருமானிடம் அர்ப்பணிப்பதே பெரியோர்களின் கடமையாகும்.

ஸ்ரீமதஹோபிலமடம் தோன்றியது முதல் நமக்குத்தெரிந்த குருபரம்பரைகளிலிருந்தோ, பழைய ரிக்கார்டுகளிலிருந்தோ நாம் தெரிந்து கொண்டுள்ள பலஉயர்ந்த ஸம்பவங்களில்ஒன்று சில தினங்களுக்கு முன் நடைபெற்றிருக்கிறது என்றால் நாம் எல்லோரும் செய்த பாக்ய விசேஷத்தினால்தான் என்பது மறைக்கமுடியாத உண்மையாகிறதல்லவா. ஸ்ரீந்ருஸிம்ஹன் பக்தனாகிய ப்ரஹ்லாதாழ்வானைக் காப்பாற்றவும் அவனது வார்த்தையை மெய்ப்பிக்கவும் எவ்வளவு த்வரையுடன் தூணில் ஆவிர்பவித்தானோ அவ்வளவு த்வரையுடன் நமது ஸ்ரீமதழகியசிங்கரின் பத்ரீயாத்ரையை நடத்திக்கொடுத்து ஸகாலத்தில் ஸங்கல்ப மஹோத்ஸவத்தையும் ஆரம்பித்து வைத்திருக்கிறான் என்பதை யாவரும் உணரமுடிகிறது. இந்த த்வரை ஸ்ரீந்ருஸிம்ஹனுக்கும், அவனுடைய அபராவதாரமாகிய ஸ்ரீமதழகியசிங்கர்களுக்கும்தான் பலனைக் கொடுக்கும். அவஸரமான ப்ரவ்ருத்தி என்பது ஸாதாரணமாக அபிநந்திக்கமுடியாததாக இருந்தாலும் விசேஷ ஸந்தர்ப்பங்களில் இதன் ப்ரவ்ருத்தி விசேஷ பலனையும் கொடுக்கிறதென்பதற்கு நிதர்சனம் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம் ஒன்றேயாகுமல்லவா?

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயும், ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி விசேஷணவிசிஷ்டராயும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீராகவ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பட்டாபிஷேகதினம்முதல்ஸஞ்சாரம்தொடங்கிஆஸேது ஹிமாசலபர்யந்தம் ஸஞ்சாரம்செய்துகொண்டு ஹ்ருஷீகேசத்திற்கு எழுந்தருளி அங்கிருந்து ஸ்வல்பதினங்களுக்குள்ளாக ஹிமோத்கிரியின் உன்னத பாகத்தில் உள்ளபுண்யக்ஷேத்ரமாகிய பத்ரீயாத்ரையை முடித்துக்கொண்டு சாதுர்மாஸ்யஸங்கல்பமஹோத்ஸவத்திற்கு மறுபடியும் ஹ்ருஷீகேசத்திற்கு எழுந்தருளியிருக்கிறார் என்பதைக் கேட்க எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும் குதூஹலம் அளவிடமுடியாததாகும். விபவாவதாரத்தில் எம்பெருமான் மனுஷ்யசரீரத்தில் ஸஞ்சரித்த காலத்தில் மனுஷ்யதர்மத்திற்குக் கட்டுப்பட்டு கார்யக்ரமங்களை கவனித்து வந்திருக்கிறான். அதிமானுஷமான கார்யங்களைச் சில ஸமயங்களில் செய்திருக்கிறானென்றாலது அவனுக்குத்தகும் அதேபோல்மநுஷ்யபுத்திக்கு அசிந்த்யமென்று சொல்லக்கூடிய ஒரு ஸம்பவமாக விளங்குகிறது ஸ்ரீமதழகியசிங்கரின் பத்ரீயாத்ரையும் இவ்வர்ஷத்திய ஸங்கல்பமஹோத்ஸவமும். ஸ்ரீமதழகியசிங்கரின் த்ருடாமன அபிஸந்தியும் ஸ்ரீந்ருஸிம்ஹனின் ஸங்கல்பமும்தான் இதற்குக் காரணங்கள் என்பதைத் தவிர வேறு என்ன இருக்கமுடியும்? வேறு எவ்வித காரணமும் இக்கார்யத்தைப் பூர்த்தி செய்திருக்க முடியாது. ஸ்ரீமதஹோபிலமடத்தின் குருபரம்பரையில் ஒரு பொன்னேட்டில்பொறிக்க வேண்டிய ஸம்பவம் என்பதை நாம் கூறமுடிகிறது. இம்மாதிரியான காலவிசேஷத்தில் நாம் வஸிக்கிறோம் என்பதும் நமது பாக்ய விசேஷமாகும்.

திருத்தம்:— சென்ற ஸஞ்சிகையில் 149-வது பக்கத்தில் இரண்டாவது பத்தி 34-வது வரியில் .... என்ற இடத்தில் 'இக்லாஸ்' என்று வாசிக்கவேண்டும்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[ஹேமலம்பிஸூ தக்ஷிணாயநம் - க்ரீஷ்ம ருது, கர்க்கடக மீ]

16-7-57	ஆடி மீ 1வ	செவ்வாய்க்கிழமை	கடகரவி 11-53, தக்ஷிணாயநபுண்யகாலம், ஸங்க்ரமண தர்ப்பணம், சூன்யதிதி.
17-7-57	2வ	புதன்கிழமை	கடக க்ருஷ்ண ஷஷ்டி திதி.
18-7-57	3வ	வியாழக்கிழமை	அதிதி.
19-7-57	4வ	வெள்ளிக்கிழமை	ஸப்தமி திதி.
23-7-57	8வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி, ரோகிணி, 22-வது பட்டம் ஸ்ரீமந் நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25-7-57	10வ	வியாழக்கிழமை	த்ரயோதசி - சதுர்தசி திதித்வயம்.
26-7-57	11வ	வெள்ளிக்கிழமை	● அமாவாஸ்யை.
27-7-57	12வ	சனிக்கிழமை	புஷ்யம், 36-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
30-7-57	15வ	செவ்வாய்க்கிழமை	பூரம், ஸ்ரீ ஆண்டாள், 26-வது பட்டம் ஸ்ரீரங்க நாதயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம், திருவாடிப்பூரம்.
3-8-57	19வ	சனிக்கிழமை	ஸ்வாதி, 25-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
6-8-57	22வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி.
9-8-57	25வ	வெள்ளிக்கிழமை	உத்திராடம். ஸ்ரீ ஆளவந்தார், 14-வது பட்டம் ஸ்ரீமந்நாராயணயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
10-8-57	26வ	சனிக்கிழமை	○ பூர்ணிமை, ரிக்யஜுருபாகர்மா.
11-8-57	27வ	ஞாயிற்றுக்கிழமை	காயத்ரீஜபம்.
15-8-57	31வ	வியாழக்கிழமை	கடக க்ருஷ்ண பஞ்சமி திதி.
16-8-57	32வ	வெள்ளிக்கிழமை	விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம், சூன்ய திதி.

[தக்ஷிணாயநம் - வர்ஷருது, ஸிம்ஹ மீ]

17-8-57	ஆவணி மீ 1வ	சனிக்கிழமை	ஸிம்ஹக்ருஷ்ணஸப்தமி திதி.
18-8-57	2வ	ஞாயிற்றுக்கிழமை	வைகாநஸ ஸ்ரீஜயந்தி.
20-8-57	4வ	செவ்வாய்க்கிழமை	முநித்ரய, ஸ்ரீபாஞ்சராத்ர, ஸ்ரீஜயந்தி.
21-8-57	5வ	புதன்கிழமை	ஏகாதசி.
22-8-57	6வ	வியாழக்கிழமை	த்வாதசி, ஹரிவாஸரம் 4-52.
24-8-57	8வ	சனிக்கிழமை	போதாயன அமாவாஸ்யை.
25-8-57	9வ	ஞாயிற்றுக்கிழமை	● அமாவாஸ்யை,
26-8-57	10வ	திங்கட்கிழமை	ப்ரதமை, த்விதீயை திதித்வயம்.
27-8-57	11வ	செவ்வாய்க்கிழமை	த்ருதீயை திதி.
28-8-57	12வ	புதன்கிழமை	ஸாம உபாகர்மா.

குறிப்பு:— ஆவணி, புரட்டாசி மாதங்களில், குஜ (செவ்வாய்) அஸ்தமனதோஷ மிருப்பதினால் ஆவணி 12வ புதன்கிழமைதினமே ஸாம உபாகர்மாவை ப்ரதம உபாகர்மாவாக இருந்தாலும் கூட சாந்திபூர்வகமாகவே அனுஷ்டிக்கவேண்டும்.

Regd. No. M. 4437.

போன் நெ. 112.

காஞ்சீபுரத்தில் கலியாண பட்டு ஜவுளிகள்
வாங்க நம்பிக்கையான இடம்

புதிய ஜவுளிக்கடை

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்,

184. காந்தி ரோடு, காஞ்சீபுரம்.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1907.)

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு,
மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்டரி.